
# மலர்

ஜனவரி. 1970



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Compliments*

*From*

# ELEPHANT BEEDI COMPANY

130, WOLFENDHAL STREET

COLOMBO - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MOTORISTS!!**

# YOU ARE SAFE WITH US.

**we carry out repairs**

**Efficiently, Economically & Expeditiously**

**Our Proprietor:**

MR. S. A. SELVANAYAGAM, O B. E.

**is now in sole charge of the workshop**

**and guarantees satisfaction.**

# S. A. Selvanayagam & Sons

BATTICALOA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best compliments

of

THE MAHARAJA ORGANISATION LTD.

54, Bankshall Street,

Colombo - 11.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பலவர்ண வேலைகளுக்கு
புகழ்பெற்ற நிறுவனம்

எங்கள் உற்பத்திகளே
எமது விளம்பரம்.

உங்கள் அச்சு வேலைகளை
எங்களிடம் ஒப்படையுங்கள்.

இரஞ்சனா
அச்சகம்

98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு - 13.

தொலைபேசி : **32221**.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான

**பவுண், தங்க, வைர,**
**நகை மாளிகை.**



ஓடர்கள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

# கா. வேதாரண்யம் அன் சன்ஸ்

**தங்க ஆபரண மாளிகை,**
***இல. 40, பிரதான வீதி, மட்டக்களப்பு.***

**—: கிளைகள் :—**

| | | |
|---|---|---|
| 32, பிரதான வீதி, | 62, பிரதான வீதி, | போஸ்டாபிஸ் ரோட், |
| மட்டக்களப்பு. | கல்முனை. | அக்கரைப்பற்று. |
| போன்: 401. | போன்: 276. | போன்: 546. |



★ ஆரோக்கியமாக வாழ்வதற்குக்
கவலையை மறந்து சிரியுங்கள்.

★ கவலையை மறந்து சிரிப்பதற்கு
''சிரித்திரனை'' வாங்கிப் படியுங்கள்.

# சிரித்திரன்

தமிழுலகின் ஒரே நகைச்சுவை ஏடு.

**இன்றே சந்தாதரராகச் சேருங்கள்.**

**ஒரு வருடச் சந்தா ரூ. 6/-.   ஆறு மாதச் சந்தா ரூ. 3/-.**

பணத்தைப் போஸ்டல் ஓடராக,
மனேஜர் ''சிரித்திரன்'',
101/4, சென். பெனடிக்ஸ் வீதி, கொட்டாஞ்சேனை
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்,

**''சிரித்திரன்''**

**101/4, சென். பெனடிக்ட்ஸ் வீதி. கொட்டாஞ்சேனை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செடி: 1 மலர்: 1

# மலர்

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்—பாரதியார்.

ஜனவரி, 1970

## இந்த மலரில்

கதை — பக்கம்

யுகங்கள் கணக்கல்ல........................'கவிதா' ... 15
வர்ணபேதம்..................அ. ஸ. அப்துஸ்ஸமது ... 21
கடல்தந்த காவலன்......அருள் செல்வநாயகம் ... 27
தியாகங்கள் பாரமா? ...அருள். சுப்பிரமணியம் ... 42

கவிதை

மலர்ப் பெண்........................திமிலைத்துமிலன் ... 6
இருவம் அருவும்...........................அண்ணல் ... 11
பாடம்.....................................எருவில் மூர்த்தி ... 19
கவிபாடத் துணை..............அன்பு முகையதீன் ... 35
கூர்கெட்ட வீதி........... சு. இராமச்சந்திரன் ... 26

கட்டுரை

ஈழத்து வாசகர்களுக்கு..............அன்புமணி ... 13
தமிழ் இலக்கியத்தில்
திருக்குர்ஆன்.........ஜே. எம். எம். அப்துல்காதர் ... 37

பிற

வணக்கம்.............................................. ... 8
மலர் மணம்............................................ ... 9



---

கதைகள் யாவும் கற்பனை. கட்டுரை கவிதைகளில் உள்ள கருத்துகளுக்கு அவற்றின் படைப்பாளிகளே உரிமையாளர்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலர்ப்பெண் வந்தாள்!

செந்நெற் கழனியிலே — தென்றல்
சேர்ந்து தழுவிப் படர்கையிலே — கதிர்
பொன்னிறம் பூக்கையிலே — களி
பொங்கிடச் சிட்டுக் கொறிக்கையிலே — அங்கோர்
மின்னிடை ஆடையிலே — கவண்
வீசித் துரத்திக் கலைக்கையிலே — மலர்ப்
பெண்ணவள் கோலங்கண்டேன் — அதில்
பித்துப் பிடித்துப் பிதற்றுகின் றேனடா!

பூம்புனல் வாவியிலே — நிலாப்
புன்னகை செய்து பொழிகையிலே — கெண்டல்
வீங்கித் தவழ்கையிலே — பாறை
மேலொரு மீன்மகள் ஏறயிலே — அவள்
தீங்குழல் யாழெடுத்தே — தமிழ்த்
தேனைக் குழைத்திசை கூட்டையிலே — மலர்ப்
பாங்கினள் தோற்றம் கண்டேன் — அதில்
பைத்திய மாகிப் பகருகின் றேனடா!

மாமரச் சோலையிலே — மந்த
மாருதம் வீசிக் கலக்கையிலே — தளிர்
காமுறக் கொஞ்சையிலே — குயில்
கான மிசைத்துக் களிக்கையிலே — குளிர்ப்
பூமரம் பூக்கையிலே — வண்ணம்
கொத்துக் கொத்தாகக் குலுங்கையிலே — மலர்ப்
பாமகள் காட்சி கண்டேன் — அவள்
பாத மலர்தொட்டுப் பூசிக்கின் றேனடா!

பொங்கும் கடலினிலே — அலை
பூத்த துமிவந்து காற்றிலடிக்கையில்
தெங்கின் சலசலப்பில் — இணை
சேர்ந்தே குருகுகள் — தாள மிசைக்கையில்
தங்கக் கதிர்வரவில் — நெடும்
தாழை மடல்முரு கேறி அவிழ்கையில்
மங்கை யுருவம் கண்டேன் — மலர்
வாணியின் நோக்கில் மயங்கிவிட் டேனடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தாமரைப் பொய்கையிலே — இளம்
தண்டொடு நாணல் தலைகுனிந் தாடயில்
தேமலர் மீதினிலே — வண்டு
செந்தமிழ் பாடித் திறந்து சுகிக்கையில்
காமரு பாசடைமேல் — முத்துக்
கண்களாய் நீரின் கவின்மணி சிந்தயில்
நாமகள் கோலம் கண்டேன் — மலர்
நங்கையின் போக்கில் நடத்துகின் றாளடா!

வானுயர் கோபுரத்தே — மணி
மண்டப மீது வருவேனென்றாள் — கலைத்
தேனுயர் காவியத்தே — உயிர்ச்
செந்தமி ழாகத்திகழ்வனென்றாள் — தொழில்
தானுயர் கூட்டத்திலே — செயற்
சக்திய தாகத் தரிப்பனென்றாள் — அவள்
நானுய ராறுரைத்தாள் — மலர்
நங்கையின் காதல் நயந்துநின் றேனடா!

நாட்டிய மேடையிலே — நடு
நாயக மாக நடப்பனென்றாள் — இசைப்
பாட்டின் நடுவினிலே — உயிர்ப்
பண்முழு தாகப் படிவனென்றாள் — கல்வி
ஊட்டும் இடத்திலெலாம் — அதன்
உட்பொரு ளாக உறைவனென்றாள் — அவள்
ஆட்டி நடத்துகிறாள் — மலர்
அன்னையின் அன்பில் அமிழ்ந்திவிட் டேனடா!

தூய கலையுணர்வில் — அவள்
தோற்ற மெடுத்துத் தொடருகின்றாள்
ஆய கலைவடிவாம் — அந்த
அன்னையை நோக்கிக் கரங்குவிப்போம் — இதோ
நேயரை நோக்குகிறாள் — இனி
நெஞ்சை மலர்த்தி இடமளித்தே — இந்தத்
தாயருள் பெற்றிடுவோம் — மலர்த்
தண்மகள் காதல் தவம்பெரி தாமடா!

'திமிலைத்துமிலன்''



ஈழத்தின் முன்னணிக் கவிஞர்களில் ஒருவர் ''திமிலைத்துமிலன்''. தமிழகத்திலும், ஈழத்திலும் நடைபெற்ற பல இலக்கியப் போட்டிகளில், கதை, கவிதை, கட்டுரை, நாடகம் ஆகியவற்றுக்கான பல பரிசுகளைப் பெற்றிருக்கிறார். சிறந்த சிற்ப, ஓவியக் கலைஞரும்கூட. 'நீரரமகளிர்', 'கொய்யாக்கனிகள்' ஆகியவை இதுவரை வெளிவந்துள்ள இவரது கவிதை நூல்கள்.
— ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வணக்கம்

ஈழம் தனித்துவமுடையது.

ஈழத்து எழுத்து தனித்துவமுடையது.

ஈழத்து இலக்கிய முயற்சிகளுக்கு விரிவான களம் அமைத்துக் கொடுக்கும் எண்ணத்துடன் ''மலர்'' மலர்கின்றது.

ஈழத்தில் எத்தனையோ சஞ்சிகைகள்—இலக்கிய ஏடுகள் தோன்றி அற்பாயுளில் மடிந்துவிட்டன. இவற்றுள் பல பெரும் மூலதன வசதி உள்ளவர்களால் ஆரம்பிக்கப்பட்டவை. அதை நாம் அறிவோம். இருப்பினும் துணிந்து இந்த ''மலர்'' சஞ்சிகையை வெளிக்கொணருகிறோம். எமது முயற்சியின் தீவிரத்தை ஈழத்து வாசகர்கள் — இலக்கிய அன்பர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுகிறோம்.

''மலர்'' முதல் ஏடு உங்கள் கைகளிலே இருக்கிறது. அதன் வளர்ச்சிக்கான திட்டம் எங்கள் கைகளிலே இருக்கிறது. உருவத்திலும் உள்ளடக்கத்திலும் வளர்ச்சியின் முத்திரை நிச்சயம் விழுந்தே ஆகவேண்டும். இதை வாசகர்கள் மனதில் கொள்ளவேண்டும்.


இன்றைய இலக்கிய உலகில் ''கோஷ்டிப் பிரிவு'' ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் பரவிக்கிடக்கிறது. ஆனால் ''மலர்'' அதற்கு விதிவிலக்கானது. உங்கள் கைகளிலிருக்கும் முதல் ஏடே அதற்குச் சான்று.

உண்மை, நேர்மை, நடுநிலை — இதுவே ''மலர்'' ஏட்டின் தாரகமந்திரம்.

எனவே —

ஈழத்தில் ஒரு இலக்கிய பாரம்பரியத்தைக் கட்டி எழுப்ப - ''மலர்'' ஆத்மார்த்தமான – சத்தியமான - பணியை ஆற்றும் என்பதை ஈழத்து இலக்கிய அன்பர்கள் நிச்சயம் நம்பலாம்.

அப்படி நம்பினால், ''மலர்'' ஈழமெல்லாம் பரவும்வகை செய்தல்வேண்டும். ஈழத்து இலக்கிய அன்பர்கள் இதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.



வணக்கம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்

"உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்" —பாரதியார்.

மாலை: 1 | ஜனவரி 1970 | மலர்: 1

## "மலர்" மணம்

"ஈழத்தில் இலக்கியத் தரம் வாய்ந்த பத்திரிகை இல்லாத குறையைப் போக்குவதற்காக இந்தச் சஞ்சிகையை வெளியிடுகிறோம்" என்று எல்லோரையும் போல் பீற்றிக்கொள்ள நாம் விரும்பவில்லை. ஏனெனில் அக் குறையை இந்தச் சஞ்சிகையினால் மட்டும் போக்கிவிட முடியாது. ஆனால், ஈழத்தில் இலக்கியத் தரம் வாய்ந்த பத்திரிகைகள் பல தோன்றவேண்டும் என்ற எமது ஆத்மார்த்தமான ஆசையின் முன்னோடியாக இச்சஞ்சிகை வெளிவருகிறது என்பதை மட்டும் சொல்லிவைக்க விரும்புகிறோம்.

ஈழத்து இலக்கிய முயற்சிகளுக்கு ஈழத்து வாசகர்களின் முழு ஆதரவையும் திரட்டுவதன் மூலம், ஈழத்து "எழுத்தி"ன் தனித்துவத்தைப் பேணவும், அதை வளப்படுத்தவும் முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு விரிவான களம் அமைத்துக்கொடுப்பதையும், ஈழத்து வாசகரிடையே அவை முக்கியத்துவம் பெறச் செய்வதையும் லட்சியமாகக் கொண்டுள்ளது இச்சஞ்சிகை.

ஈழத்தில் எண்ணற்ற வெளிநாட்டுச் சஞ்சிகைகள் உலவுகின்றன. ஈழத்து வாசகரிடையே இவை ஆயிரக்கணக்கில் விற்பனையாகின்றன. இவை அனைத்தும் இலக்கியத் தரம் வாய்ந்தவை என்று சொல்ல முடியாது. ஆனாலும், ஈழத்து வாசகர்கள் போட்டி போட்டுக்கொண்டு இவற்றைப் படிக்கின்றனர். இது எதைக்காட்டுகிறது? ஈழத்து வாசகர்களின் 'தாகத்'தையே காட்டுகிறது. இந்தத் தாகத்தைச் சரியான இடத்துக்குத் திருப்பவும், ஈழத்து ஊற்றைக்கொண்டு இந்தத் தாகத்தைத் தணிக்கவும் நாம் என்ன செய்திருக்கிறோம். ஒன்றும் செய்யவில்லை—ஒன்றுமே செய்யவில்லை.

பிரபல தினசரிகளின் வார வெளியீடாக வெளிவரும் போயாதின இதழ்களில், பிரசித்திபெற்ற கொலை வழக்குகள், பேய்க் கதைகள், சினிமாச் செய்திகள், கதம்பங்கள் ஆகியவை ஆக்கிரமித்துக்கொண்ட இடம் போக, எஞ்சியுள்ள இடத்தில் ஒரே ஒரு சிறு கதையும், ஒரே ஒரு கவிதையும் வெளிவருகின்றன. இவை தாமா ஈழத்து வாசகர்களின் தாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் தணிப்பவை? ஆயிரக்கணக்கான ஈழத்து வாசகர்களின் இலக்கியத் தாகத்துக்கு இந்தச் சொட்டு நீர் போதுமா?

எண்ணற்ற சஞ்சிகைகள் ஈழத்தில் மலரவேண்டும். அவை ஈழத்து வாசகர்களின் தாகத்தைத் தீர்க்க வேண்டும்.

இந்த எண்ணம் மனதில் எழும்போது, ஏற்கனவே ஈழத்தில் அவ்வப்போது தோன்றி, மலர்ந்து மணம் வீசி, அல்பாயுளில் மடிந்துபோன பல சஞ்சிகைகளின் ஞாபகம் நம் மனதைத் தொடுகிறது.

அந்தச் சோக முடிவுக்கான காரண காரியங்களை ஆராய்வதற்கு இது ஏற்ற இடமல்ல. அது நம் வேலையுமல்ல. ஆனால் ஒன்று மட்டும் சொல்வோம்.

அந்தச் சஞ்சிகைகளை ஆதரிக்காமல் விட்டதற்காக ஈழத்து வாசகர் மேல் எவ்வளவு குற்றம் சுமத்துகிறோமோ, அதே அளவு குற்றத்தை சரியான முறையில் வாசகர்களை அணுகாமல் விட்டதற்காக அச்சஞ்சிகைகள் மேலும் சுமத்தலாம்.

ஏற்கனவே ஈழத்தில் மலர்ந்த பல இலக்கிய சஞ்சிகைகளுக்கு ஏற்பட்ட கதியைத்தெரிந்துகொண்டும் துணிகரமாக இந்தச் சஞ்சிகையை வெளிக்கொணருகிறோம் என்றால் அதற்குக் காரணம் ஈழத்து வாசகர்கள்மேல் நமக்குள்ள பலமான நம்பிக்கையும், அவர்கள்மேல் நமக்குள்ள இதயசுத்தமான அக்கரையும் தான். இதை ஈழத்து வாசகர்களிடம் மிகவும் அழுத்திக்கூற விரும்புகிறோம்.

அந்த நம்பிக்கையைச் சிதறடிக்காமலும், அந்த அக்கரையை உதாசீனம் செய்யாமலும் நடந்து கொள்வது ஈழத்து வாசகர்களின் நியாய பூர்வமான கடமை என எதிர்பார்க்கிறோம்.

ஈழத்து வாசகர்களுக்கு நேருக்கு நேராக ஒன்று சொல்ல விரும்புகிறோம். இது உங்கள் பத்திரிகை. உங்களுக்காகவே இது ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் ஒன்று. வாசகர்கள் விரும்புவதைக் கொடுப்பது வியாபாரம். வாசகர்கள் எதை விரும்பவேண்டுமென்று இலக்கிய கர்த்தா விரும்புகிறானோ அதைக் கொடுப்பதுதான் சேவை. அதை மட்டும் நீங்கள் மறக்கக்கூடாது.

அரசியல் கலப்பில்லாத இலக்கிய சஞ்சிகை உங்கள் ''மலர்.'' இதில் மட்டரக சினிமா செய்திகளுக்கு இடமில்லை, கற்றுக்குட்டி நடிகைகளின் கவர்ச்சிப் போஸ்கள் இதில் இடம் பெறா. கார்ட்டூன்கள், அரசியல் விமர்சனம், அக்கப்போர், வம்புமேடை, கேள்வி பதில், சித்திரக் கதை, சினிமாப்போட்டி எதுவுமே உங்கள் 'மலரி'ல் இடம் பெறுது - இடம்பெற முடியாது.

இலக்கியத் தரம் வாய்ந்த கதை, கவிதை, கட்டுரை நாடகம், நாவல் மற்றும் ஈழத்தின் கலை முயற்சிகள் பற்றிய செய்திகள், படங்கள் இவைகளே உங்கள் 'மலரி'ல் இடம்பெறும்.

ஈழத்து இலக்கியத்தின்பால் நாம் கொண்டுள்ள அபிமானம் காரணமாக, பல வருடங்களாக நெஞ்சைக்குடைந்து கொண்டிருந்த வேட்கையைச் செயல்படுத்தி, பல இரவுகளில் தூங்க விடாமல் மனதில் அலைபாய்ந்துகொண்டிருந்தஎண்ணங்களை எழுத்தாச்கி, அந்தரங்க சுத்தியுடனும் ஆத்ம திருப்தியுடனும் உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

—ஆசிரியர்.

—★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவும் அதுவும்

முத்தெ டுத்திட மூழ்கினேன் கடல்
முறுவ லித்தன நீர்ப்ப ரப்பெலாம்.
சத்த மிட்டுயர் அலைஎ ழும்பின,
சடச டத்தது கரையில் மோதின.
மத்தி டைப்படு வெண்ணெய் போலவே
மஞ்சு வெண்ணுரை கொஞ்சி நின்றன
சித்த மோளழில் காட்சி கண்டது,
சிறிது சிறிதகம் மறதி கொண்டது.

நீலப் பட்டெனக் கடல் நெளிந்ததும்,
நிறையத் தூவிய சரிகை யொத்தது.
கோலச் சுடரொளி குதூக லத்திலே
கொலுவி லமர்ந்திடு பெண்ண ணங்கென,
தாள மிட்டொரு நடைந டந்தது;
தென்றல் வந்ததைத் தழுவிச் சென்றது;
ஓல மிட்டதென் னிதயம் ஓகொகோ!
ஒப்பி லாவெழில் அப்பி நின்றதோ.

முத்தெ டுத்திட மூழ்கினேன்; கடல்
மூச்ச டைத்தது திரைம றைத்தது.
பிய்த்தெ றிந்திடும் தன்மை யில்உதை
போடுங் கால்களை போல கைகளும்,
ஒத்து ழைத்தன இறக்கை பெற்றவோர்
உணர்வு வந்தது பறந்து பார்க்கிறேன்.
பொத்துக் கொண்டெழப் பார்க்கும் மூச்சிலே
பொறுமை எங்கையோ போய்ப்ப துங்கின.

வண்டி ரைந்தது காதினில் நுரை
ஈரல் பந்தென ஊதிப் பருத்தன.
கொண்டெ ழுந்தது என்னுடல் அதன்
கூடக் குண்டெனக் குமிழி சென்றன.
தெண்டி ரைஎழில் தெரிந்த தெங்கணும்
சிந்தை இங்கேயே தங்கி நின்றது.
ஒன்று மாஇடர் சூழ்ந்த ஆழியில்
உலக மேளழி லாகி வந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிப்பி யில்பல முத்தி ருக்குமாம்
சங்கி லும்அது தங்கி ருக்குமாம்.
செப்பி டும்உயர் நத்தை யில்அது
சேர்ந்தி ருக்குமாம் நண்டு மீன்களில்.
கப்பி யுண்டுமோ கற்கள் பாறையில்
கடலில் பூத்துள கடலின் பாசிகள்.
ஒப்பு விக்குமா முத்தினை? எதை
மூழ்கி நானதில் முத்தெ டுப்பது?

மட்டி லாமகிழ் வார்த்தி டும்உயர்
வானமும் அதன் ஜால மும்நிலா
கொட்டி டும்ஒளி கூடு வண்ணங்கள்
கோல மிட்டெழில் வாழ வைத்திடும்.
பட்டு மேனியும் பாடு தென்றலும்
பயிலு நடனமாய் நெளியு மலைகளும்,
மட்ட மாதுயர் மண்டு மாழியில்
மனம்செ லுத்திட மடைய ராஇவர்?

மூச்ச டக்கிஅம் முத்தெ டுப்பது
முடியு மா? துயர் உடையு மாம்வெறும்
பேச்சி லேஎவர் பேச லாதவர்?
பெரும்ப கைபல திறன டக்கியே
நீச்ச லால் நிலங் கண்ட வர்மணி
நிற்கு சிப்பியைத் தேர்த லெங்ஙனம்?
சேச்சே! இதுபெரும் சிக்கல் ஆதலால்
சிந்தை இந்தமண் ணுலகை நாடுது.

— அண்ணல்.



இஸ்லாமிய இலக்கிய உலகில் முக்கிய இடம்பெறும் கவிஞர் 'அண்ணல்' 1953 முதல் இன்றுவரை எழுதிக்கொண்டேயிருக்கிறார். 1964ல் 'அண்ணல் கவிதைகள்' என்ற நூல் வெளிவந்திருக்கிறது. கவிதை மட்டுமல்லாமல், சிறுகதை, நாடகம் முதலிய துறைகளிலும் பரிச்சயமுள்ளவர் 'அண்ணல்'. —ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

'அன்புமணி'

ஈழத்தில் எண்ணற்ற சஞ்சிகைகள் உலவுகின்றன. ஆயிரக்கணக்கில் விற்பனையாகும் இவற்றுள் பெரும்பாலானவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதியானவை. ஈழத்தில் அச்சுப்புத்தகம் தோன்றிய காலம் முதல், இற்றைவரை ஒரு இலக்கிய சஞ்சிகை ஈழத்தில் தோன்றி நிலைபெற முடியாமல் போனது ஏன்? அவ்வப்போது தோன்றிய சஞ்சிகைகளும் குறுகிய காலத்தில் மடிந்துபோனது ஏன்? ஈழத்தில் தரமான எழுத்தாளர்கள் இல்லையா? இலக்கியப் படைப்பாளிகள் இல்லையா? அழகாக அச்சிடும் வசதிகள் இல்லையா? இந்தக் கேள்விகளுக்கான விடைகளை ஆராயப் புகுந்தால், சுட்டுவிரல் ஈழத்து வாசகர்களை நோக்கியே திரும்பும். ஈழத்து வாசகர்கள் எப்படி இதற்குப் பொறுப்பாக முடியும்?

### தேசிய உணர்வு வேண்டும்.

ஈழத்தில் இறக்குமதியாகும் அத்தனை சஞ்சிகைகளும் கண்ணைக்கவரும் வார்ணிஷ் அட்டைகளுடனும், வண்ண வண்ண ஓவியங்களுடனும், எண்ணிறந்த பக்கங்களுடனும் வெளிவருகின்றன. பணங்கொடுத்துப் பத்திரிகையை வாங்கும் வாசகன், ஈழத்தில் ஆரம்பமாகும் சஞ்சிகைகளை இந்த மயக்குமோகினிப் பத்திரிகைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கிறான். ஈழத்துச் சஞ்சிகைகளை ஒதுக்கித்தள்ளுகிறான். இது நியாயமா? பெரும் விற்பனை வசதிகளை (Circulation) மூலதனமாகக் கொண்ட வெளிநாட்டுச் சஞ்சிகைகளுடன் அந்த வசதிகள் அற்ற ஆரம்ப சஞ்சிகைகளை ஒப்பிடலாமா? இந்த ஒப்பிடும் மனப்பான்மையை ஈழத்து வாசகன் கைவிடவேண்டும்.

ஈழத்து சஞ்சிகைகளை-அவை ஈழத்தில் உருவானவை என்ற ஒரே காரணத்துக்காக-அவை ஈழத்துப் படைப்புகளைத் தாங்கிவருகின்றன என்ற ஒரே காரணத்துக்காக-ஈழத்து வாசகன் பணங்கொடுத்து வாங்க வேண்டும்.

வெளிநாட்டு சஞ்சிகைகள் வளர்ந்து பெரு விருட்சமாகிவிட்டவை. இந்நாட்டில் உருவாகும் சஞ்சிகைகள் முளைவிடும் பயிரின் நிலையில் உள்ளவை. எதற்கு நீர் ஊற்றவேண்டும்? எதற்கு ஆதரவு தேவை? வளரும் பயிருக்கு ஆதரவு கொடுத்தால் காலக்கிரமத்தில் அதுவும் வளர்ந்து பெரு விருட்சமாகிவிடமுடியும் அல்லவா? ஈழத்து வாசகன் இதை மனதில் கொள்ளவேண்டும். தேசிய உணர்வுடன் எமது சஞ்சிகைகளை நோக்கவேண்டும். வெளிநாட்டுச் சஞ்சிகைகளை வாங்கிப் படிக்கவேண்டாம் என்று நாம் சொல்லவில்லை. ஆனால் இந்த நாட்டில் வெளியாகும் நம்மவர்களின் சஞ்சிகைகளை கட்டாயமாக வாங்கிப் படிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறோம்.

### வெளிநாட்டுச் சஞ்சிகைகள் அனைத்தும் இலக்கியத்தரமுடையவையா?

வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் அத்தனை சஞ்சிகைகளையும் போட்டிபோட்டுக்கொண்டு வாங்கிப் படிக்கும் ஈழத்து வாசகர்களையும், போட்டிபோட்டுக்கொண்டு ஏஜென்சி எடுக்கும் விற்பனையாளர்களையும் பார்த்து நாம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறோம்? இந்தப் பத்திரிகைகள் அனைத்துமே இலக்கியத்தரமுடையவையா? பாமர மக்களின் பலவீனத்தைப் புரிந்துகொண்டு பணம் சம்பாதிக்க முயலும் பத்திரிகைகள் எத்தனை? சினிமா நடிகைகளின் படங்களை தூண்டிலில் இரையாகப் போட்டு வியாபாரம் செய்யும் பத்திரிகைகள் எத்தனை? சிந்தித்துப்பாருங்கள்! இறக்குமதியாகும் நூற்றுக்கணக்கான சஞ்சிகைகளில் இலக்கியத்தரமுடையவை என்று பொறுக்கினால் எத்தனை தேறும்?

### வாசகரின் ஆதரவு வேண்டும்.

விற்பனையாளர்களைக் குறைசொல்ல முடியாது. அவர்கள் வியாபாரம் செய்பவர்கள். வாசகர்கள் தரமற்ற இறக்குமதிக் குப்பைகளுக்கு ஆதரவு நல்குவதைத் தவிர்த்தால் விற்பனையாளர்கள் தாமாகவே அவற்றின் இறக்குமதியில் பண முதலீடு செய்வதைத் தவிர்ப்பர். வாசகர்கள் ஈழத்துச் சஞ்சிகைகளை ஆதரித்து தேசிய உணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுடன் அவற்றை வாங்கிப் படிக்க முன் வந்தால், விற்பனையாளர்களும் அவற்றுக்கு ஏஜென்சி பெற்று விற்பனையைப் பெருக்குவர். விற்பனை பெருகினுல், சஞ்சிகை வளர்ச்சியுறும். மேலும் மேலும் புதிய சஞ்சிகைகள் தோன்றி ஈழத்து இலக்கியத்தை வளப்படுத்தும். ஆக, ஈழத்தில் தரமான சஞ்சிகைகள் உருவாவதும், ஈழத்து 'எழுத்து' தனித்துவம் பெற்று வளர்ச்சியடைவதும் ஈழத்து வாசகர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என்பது புலனுகும். இந்தப் புனிதமான பணியை ஒரு பெரும் தேசியப் பணியாக மனதில் கொண்டு, மகத்தான கடமையாக மதிப்புக்கொடுத்து, ஈழத்தில் வெளியாகும் சஞ்சிகைகளுக்கு ஈழத்து வாசகர்கள் முழு ஆதரவு கொடுக்கவேண்டும்.

**''மலர்'' மலர்கிறது!**

ஈழத்தில் பல சஞ்சிகைகள் அவ்வப்போது தோன்றி அல்பாயுளில் மடிந்துபோயிருக்கின்றன. இதற்கான காரணம் என்ன என்பதை நாம் மேலே கூறிய விபரங்களிலிருந்து வாசகர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள். ''மலர்'' சஞ்சிகைக்கும் இதே கதி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு ஈழத்து வாசகர்களின் கைகளிலேயே தங்கியிருக்கிறது.

ஈழத்து வாசகர்கள்மேல் முழு நம்பிக்கை கொண்டு இம் ''மலர்'' வெளிவருகிறது. அதேபோன்று, வாசகர்கள் ''மலர்'' மேல் முழு நம்பிக்கை வைக்கும் அளவுக்கு ''மலர்'' சிறப்புடன் வெளிவரும்.

எமது எண்ணங்கள் புனிதமானவை. எமது லட்சியங்கள் மகத்தானவை. எமது முயற்சிகள் இதயசுத்தமானவை. அதனுல் அரசியல் கலப்பில்லாத இலக்கியத் தரம் வாய்ந்த ஒரு உயர்ந்த ஏடாக ''மலர்'' சஞ்சிகையை வெளியிட ஆத்மார்த்தமாக உன்முக்கிறேம். ஈழத்து இலக்கிய முயற்சிகளுக்கு விரிவான களம் அமைத்துக் கொடுக்கவும், ஈழத்துப் படைப்புகளை ஈழத்து வாசகர்கள் மத்தியில் முக்கியத்துவம் பெறச் செய்யவும், ''மலர்'' தன்னுல் இயன்றளவு மிகவும் அடக்கமாகவும் அமைதியாகவும் பணியாற்றும்.

**கண்ணைக் கவரும் வண்ண ''மலர்''**

ஈழத்தில் இதுவரை வெளிவந்த சஞ்சிகைகள் போலல்லாது ''மலர்'' எழில்பூத்த வண்ண மலராகப் பிரகாசிக்கிறது. பெரிய $9\frac{1}{2}'' \times 7\frac{1}{2}''$ அளவு, 48 பக்கங்கள் இரு வர்ண அட்டை, வண்ண ஓவியங்கள், ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களின் தரமிக்க இலக்கியப் படைப்புகள் இத்தனையும் ''மலரை'' அழகுசெய்கின்றன. இனிய கதை, கவிதை, கட்டுரை, நாவல் படிக்க விரும்புவோருக்கு அரிய விருந்து ''மலர்'' மாத சஞ்சிகை. எனவே ஈழத்து வாசகர்கள் அனைவரும் தமது ஏகோபித்த ஆதரவை இம் ''மலரு''க்கு நல்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

—★—

## ஈழத்து எழுத்தாளர்களுக்கு மகிழ்ச்சிதரும் ஒரு நற்செய்தி!

ஈழத்து எழுத்தாளர்கள் தனிப்பட்ட முறையில் ஈழத்தில் வெளியிடும் நூல்களுக்கு 'மலர்' சஞ்சிகையில் இலவசமாக விளம்பரம் வெளியிடப்படும். இவ்வாறு விளம்பரம் பெறவிரும்பும் எழுத்தாளர்கள், தாங்கள் வெளியிடும் நூலின் ஒரு பிரதியுடன் விண்ணப்பிக்கவேண்டும். இத்திட்டம் 1-1-70 முதல் வெளிவரும் நூல்களுக்கு மட்டுமே அமைவதாகும்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுகங்கள் கணக்கல்ல

''கவிதா''

கதவு சிறிது திறந்திருக்கிறது. அதன் வழியே மீரா கட்டிலில் குப்புறப் படுத்திருப்பது நன்றாகத் தெரிகிறது. அவளை அந்த நிலையில்தான் பார்ப்போம் என்று நான் எதிர்பார்க்காமல் இல்லை. ஆனாலும் ஆத்திரம் பற்றிக்கொண்டு வரத்தான் செய்தது. மேலுதட்டைப் பற்களிடையே கடித்துக்கொண்டு ''மீரா ...'' என்று கூப்பிட்டேன். எவ்வளவோ முயன்றும் அந்தக் குரலில் இருந்த தேவையில்லாத பதட்டத்தை மறைக்க முடியவில்லை.

பரபரவென்று வெள்ளைப் பேப்பர்களையும் பேனையையும் தலையணைக்கடியில் திணித்துவிட்டு ''ஏனம்மா? ...'' என்று கேட்டபடி அவள் எழுந்து வந்தாள். அவள் குரலிலும் அந்த பதட்டம் தொனித்ததை நான் கவனிக்காமல் இல்லை.

''தம்பி அப்படியே சிமெண்டில சாய்ந்து நித்திரையாய்ப் போயிருக்கிறான். சுவாமி அறைக்கு விளக்கேற்றச் சொல்லி எத்தனை நேரமாய்ப் போயிற்று? ஒன்றையும் கவனிக்காமல் அங்கே என்ன பண்ணிக்கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டேன். ஏனோ கேட்டேனே தவிர கேட்டுவிட்டு பின்தான் மீரா உண்மையை என்முகத்துக்கு நேரேயே கூறிவிடுவாளோ என்ற பயமும், அப்படிக் கூறிவிடக்கூடாதே என்ற தவிப்பும் ஏற்பட்டன.

''மத்ஸில் ஒரு பிரப்ளம் அம்மா, நாளைக்குச் செய்து வரும்படி ஒரு [illegible] தந்தாள் — அதுதான் ...'' என்று இழுத்தபடி மீரா நிற்காமல் நகர்ந்தாள்.

நான் அதிலேயே விறைத்து நிற்கையில் மீரா தோளில் துவளும் குழந்தையைத் தூக்கியபடி படுக்கையறைக்குப் போவது தெரிகிறது. நான் விரும்பினால் ஒரு நொடியில் அவள் அறைக்குப்போய் அவள் செய்துகொண்டிருந்த ''மத்ஸ்'' ப்ராப்ளத்தின் சிக்கலை விடுவித்து விடமுடியும். ஆனால் அதன்பின்......? இவ்வளவு நாளும் என் அந்தரங்கத்துக்குள்ளேயே புதைத்துவிட விரும்பிய உண்மையை எனக்குத் தெரியும் என்று அவளுக்கு முன்னால் நிரூபித்துக்கொண்டு, அதன் மூலம் அவளை இந்தச் சிக்கலில் இருந்து மீட்டுக் கொள்ளும் ஒரே வழியை அடைத்துவிட நேருமா? இவ்வளவு இங்கிதமில்லாதவளாக நடந்து கொண்டு விட்டபிறகு எந்த முறையில் என்றால் அவளைத் திருத்திவிட முடியப் போகிறது?

பின்னேரம் கிணற்றடிக்குச் சென்றபோது மீரா கிணற்றுக் கட்டின்மீது படுத்திருப்பது தெரிந்தது. அவள் இதழ்களில் இலேசான புன்னகை. ஒரு கையைத் தலைக்கடியில் வைத்து, மறு கையை கிணற்றினுள் விட்டபடி படுத்திருந்த அந்த நிலையிலும், சுற்றிலும் சூழ்ந்துகொண்டு வருகின்ற அந்தச் சூழலிலும் அவள் நினைவுகள் இல்லை! கிணற்றினுள் நெளியும் வட்ட வட்டமான அலைகளில் யார் முகத்தைக் கண்டு அவள் அப்படிச் சிரித்துக்கொண்டிருக்கிறாளோ? யார் முகமோ? எனக்குத் தெரியாதா? மீரா! உன் சாதி என்ன? குலமென்ன? அவன் ...? உன் மாமாவோ தாத்தாவோ எப்படியடி இதற்குச் சம்மதிப்பார்கள்? அவர்கள் வேண்டாமே நான் தான் எப்படிச் சம்மதிப்பேன்? சம்மதித்து விட்டு மற்றப்பெண்ணை எங்கே கொண்டு போய்த் தள்ளுவேன்? வேண்டாம் மீரா மறந்து விடு! நீ நீயாகவே உணர்ந்து அவனை மறந்துவிடு - நான் உன்னைப் பழைய மீராவாகவே நினைக்கிறமாதிரி நடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறேன். நீயும் உன் மனதில் இடையே முளைத்த இந்தச் சலனத்தை இடையிலேயே மறந்துவிட்டு பழைய மீராவாக மாறிவிடு!

மனத்துக்குள்ளாகவே பேசிக்கொண்டு மெதுவாகப் பின்வாங்கினேன். இருட்டி வெகு நேரமானபின்தான் மீரா வீட்டுக்குள் வந்தாள்.

ஒரு நாள் — வெள்ளிக்கிழமை நான் கோயிலுக்குப் போய்விட்டு வந்தேன். மீராவைக் கண்ணில் காணவில்லை. சின்னப் பெண்ணிடம் "அக்கா எங்கே"..? என்று கேட்டேன். ''மாட்டுக்கு வைக்கோல் போடப் போனா'' என்று கூறினாள். வீட்டுக்குள் எல்லாப் பொருட்களும் போட்டது போட்டபடியே கிடந்தன. எனக்கு ஆத்திரமாய் வந்தது. நான் வெளியே போன நேரம் தொடக்கம் மீரா உள்ளே இல்லை என்பது தான் அதற்கு அர்த்தம், வெளியே இவ்வளவு நேரம் என்ன லயிப்பு வேண்டிக்கிடக்கிறது? எங்காவது தனியாக உட்கார்ந்து கொண்டிருப்பாள் என்று தெரியாதா எனக்கு? காதல் கண்மூடிக் காதல்! டாக்டரின் மனைவியாகிவிடலாம் என்ற நினைவில், சாதிவிட்டுச் சாதிபோய்த் திருமணம் செய்து கொண்டு அம்மா, தம்பி, தங்கை சுற்றம் எல்லாம் மறந்து தனக்காக மட்டும் மகிழ்ச்சியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற கேவலமானவளாக நான் பெற்ற மகளைப்பற்றி நினைப்பது என் மனதுக்கே என்னவோ போல்தான் இருந்தது. தற்செயலாக ஜன்னலடிக்குச்சென்றபோது மாட்டுக்கொட்டகை தெளிவாகத் தெரிந்தது. கட்டைத் தென்னங்கன்றின் ஓலையைப்பிடித்தபடி வானத்து நிலவையே பார்த்தபடி மீரா நின்றுகொண்டிருந்ததும் தெரிந்தது. என் மனதில் எழுந்த கணநேர குருட்டு வெறியின் ஆக்ரோஷத்தில் அவளை அப்படியே இழுத்து வந்து அறையலாமா? என்று தோன்றியது. உள்ளே வருகிற நேரம் வரட்டும் என்று காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினேன்.

சின்ன மகளும் மகனும் எட்டு மணிக்கு வந்தார்கள். ''அக்கா எங்கே?'' என்று சின்னப் பெண்ணிடம் மறுபடியும் கேட்டேன். "அறையில் இருக்கிறா'' என்றாள் அவள். வழக்கத்தில் இவர்களுடனேயே சாப்பிட வந்துவிடும் அவள் வராதது என் மனதுக்கு நெருடலாகவே இருந்தது. ஒரு நிமிடம் அவள் தென்னங்கீற்றைப் பிடித்தபடி ஏக்கத்துடன் நின்ற காட்சி நினைவுக்கு வந்தது. மனம் வக்கரித்துக்கொண்டது. ''ஏன் இவளுக்கு இந்த வேண்டாத காதலும் ஏக்கமும்? இவளுக்கு காதலைப்பற்றி என்ன தெரியும்? வெறும் மனமயக்கத்தைக் காதல் என்று எண்ணிக்கொண்டு பாழாய்ப்போகத்தான்'' என்று மனதோடேயே எண்ணிக்கொண்டு நேரே அவள் அறைக்குச் சென்றேன்.

நினைத்தபடி அவள் குப்புறப்படுத்து எழுதிக்கொண்டுதான் இருந்தாள். பக்கம் பக்கமாக எழுதிக் குவிப்பதற்கும் தனித் தனியாகப் பிரிந்துபோய் யோசித்துக்கொண்டு நிற்பதற்கும் அவளுள்தான் எத்தனை அந்தரங்கமோ?

"மீரா'' என்று குரல் கொடுத்தேன். அவள் பதறித்துடித்து எழவில்லை. என்னை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு மறுபடியும் எழுதத்தொடங்கினாள். இரண்டு மூன்று வரிகள் எழுதியதும் கடிதம் முடிந்திருக்க வேண்டும். "என்றும் உங்கள் மீரா'' என்று கையெழுத்திட்டதை நான் பார்த்துக்கொண்டுதான் நின்றேன். அவள், தாள்களை ஒன்றாக்கி நிதானமாக மடித்தாள். பொங்கிவந்த ஆத்திரத்துக்கு அணையிட்டவாறு நின்றேன் நான். மடித்த கடிதத்தை ஒரு கவரில் செருகினாள். முடிவில் "எல்லாம் முடிஞ்சு போச்சம்மா" என்றாள் பெருமூச்சுடன்.

எனக்கு ஆத்திரம் மாறி அந்த இடத்தைக் குழப்பம் எடுத்துக்கொண்டது. வார்த்தை எழும்பாமல் ஆயிரம் கேள்விகளை கண்களிலேயே வைத்து அவளைப் பார்த்தேன்.

"உங்களுக்கு எல்லாம் தெரியும் என்று எனக்குத் தெரியும் அம்மா. இனி எதுவும் இல்லை. எல்லாம் முடிஞ்சு போச்சு'' மீராவே பேசினாள்.

"தெய்வமே என் பிரார்த்தனைக்குச் செவி சாய்த்தாயே'' என்று கடவுளுக்கு நன்றி செலுத்தலானேன் நான். மீரா தொடர்ந்து பேசினாள்.

"நீங்களும், ஏன் அவரும் கூட நினைப்பதுபோல சாதி என்ற அர்த்தமற்ற சம்பிரதாயத்துக்காக நான் இந்த முடிவுக்கு வரவில்லை. காதல் என்பது ஒருவனுடையதும் ஒருத்தியுடையதுமான இதயங்கள் சம்பந்தப்பட்ட விஷயந்தான். ஆனால், அந்த இரண்டு இதயங்களின் மலர்ச்சிக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் கடமையைப் புறக்கணிக்கும்போது காதல் காமமாகிவிடுகிறது. அம்மா, அம்மா நான் அவரைத் திருமணம் செய்வது உங்களில் எவருக்குமே விருப்பமில்லை; ஐயாவும் இல்லாமல் இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டு என்னை ஆளாக்கியிருக்கிறீர்கள். இவ்வளவு காலமும் திரும்பிப்பார்க்காமல் இருக்கிற உறவுக்காரர்களை நம்பி உங்களையும் தம்பி தங்கைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்க்கதியாக்கிவிட்டு — அவருக்குப் பின்னால நான் போயிடமாட்டன்...''

நான் அவசரமாக ஏதோ கூற வாயெடுத்ததும் அவள் ஒரு உயிரற்ற சிரிப்புச் சிரித்தாள்.

"தெரியும் அம்மா; எந்த விதத்திலும் என் வாழ்வை நீங்கள் பலி கேட்கமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்! பிரச்சினை இங்கே மட்டுமல்ல; என்னைக் கடமை அழைப்பதுபோல அவரையும் கடமை அழைக்கிறது. உயர்ந்த சாதியைச் சேர்ந்த பெண் என்பதைத்தவிர, என்கூட ஒரு சதத்தையும் சீதனமாகக் கொண்டுசெல்ல என்னால் முடியாது. அவருக்கு நான்கு தங்கைகள். தங்கள் சொத்தை எல்லாம் அண்ணன் படிப்பதற்காக விட்டுக்கொடுத்துவிட்டு வாழ்வுக்காக அண்ணனையே எதிர்பபர்த்கொண்டு நிற்கிறார்கள். இப்போது அவர் காதலுக்காக அவரையும் தியாகம் செய்துவிடமுடியுமா அம்மா? முடிந்தாலும் அப்படிப்போவது சரியா அம்மா? அவருக்கு இது புரியவில்லை. இதில் அதைத்தான் புரிய வைத்திருக்கிறேன். இனிக்குழப்பமில்லை.

இவ்வளவையும் ஒரே மூச்சில் கூறிவிட்டு ''வாருங்கள் சாப்பிட'' என்றாள் மீரா. இதை அவள் எத்தனை துக்கத்தோடு கூறினாளோ அத்தனைக்கு நான் அதை உணரவில்லை! இது ஒரு இளமைக் கனவே என்றும் காலப் போக்கில் மறந்துவிடுவாள் என்றும் எண்ணியவளாக அவளுக்குச் சாப்பாடுபோட அழைத்துச் சென்றேன்.

அதன் பிறகு ஒருநாள் என் மாமனார் எங்கள் வீட்டுக்கு வந்தபோது மீராவுக்கு ஏற்ற மாப்பிள்ளை ஒருவன் இருக்கிறான் என்றும் பார்க்கலாமா என்றும் கேட்டார். நான் ''மீராவிடம் கேளுங்கள்'' என்று தூண்டினேன். என்ன சொல்லி விடுவாளோ என்று. உள்ளூர எனக்குப் பயம்தான் மாமா சொல்லச்சொல்ல மீரா பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தாள். எதிர்த்து எதுவும் சொல்லவில்லை. அந்தத் தைரியத்தில் நாலு வார்த்தை மாமாவுக்கு அனுசரணையாகப் பேசினேன். மாமா போய்விட்டார்.

அன்று மீரா மீண்டும் குப்புறப்படுத்துக்கொண்டுவிட்டாள். சாடையாக விம்மிக்கொண்டிக்கவேண்டும். நான் போய் மீரா என்று கூப்பிட்டதும் ஹோ என்று அழ ஆரம்பித்துவிட்டாள்.

பழைய ஞாபகம் மறக்கவில்லை என்று தெரிந்தது. என் கைகளை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு அழுகையும் விம்மலுமாக வெடித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா அவர் தாழ்ந்த சாதிக்காரர் என்பதால் என் கை பிடிக்கத்தான் மறுத்தீர்கள். ஆனு, அதே காரணத்துக்காக என் இதயத்தில் வாழுகிற தகுதிகூட அவருக்கு இல்லே என்று நினேக்காதீங்க அம்மா, அவரை மறந்துவிட்டு இன்னெருத்தரைக் கல்யாணம் செய்துகொள்வது இந்த ஜன்மத்தில் என்னல் முடியாது' — பெரிய விம்மல் ஒன்றை சமாளித்துக்கொண்டு பேசினுள்.

"கிரிதரனேயே நினேத்துக்கொண்டிருந்த மீராவை ராஜுவுக்குக் கட்டிவைத்தாங்களே என்னத்தைக்கண்டாங்க? அவனேச் சாகடிக்கத்தான் முடிந்ததே தவிர அவனே விட்டு அவன் நினேவைப் பிடுங்கிவிட முடிந்ததா அம்மா?'' சிறிது நேரம் என் கைகளேப் பிடித்தபடி விம்மினுள். பின் சிறிது சிறிதாக விம்மல் தணிந்தது. என் கைகளே விடுவித்துவிட்டு அழுகைக் கலப்பற்ற குரலில் எங்கேயோ பார்த்துக்கொண்டு பேசினுள்.

''நான் பச்சைக் குழந்தையில்லேயம்மா; கிட்டத்தட்ட என் வயதில்தான் திலகவதியார் கலிப்பகையாரை இழந்திருக்கலாம். அவருக்கிருந்த மன உறுதியையும் நியமத்தையும் அந்த யுகத்துக்கே சாசனமெழுதியாச்சாம்மா? வழி காட்டிகள் என்று அவர்களேயெல்லாம் உயர்த்தி வைத்துவிட்டு கண்மறைவில் நின்றுகொண்டு தவறு செய்யும்படி கேட்பது நியாயமாகுமா அம்மா?''

எனக்கு மீராவின் முகத்தைப் பார்க்கத் தைரியமில்லே, இவள் எவ்வளவு தெளிவாகச் சிந்தித்திருக்கிறுள்? இத்தனே பெரிய மனப்பக்குவம் இத்தனே சிறிய மீராவிடம் வாய்த்திருக்கிறதை வியந்த அதே சமயம் வாழ்க்கையின் மிச்சமிருக்கிற பகுதியின் மேடு பள்ளங்களிலெல்லாம் தன்னந்தனியவளாக மீராவை எண்ணியபோது எனக்கே மிரட்சியாய் இருந்தது. திலகவதியார் வாழ்ந்த யுகமா இது? ''உன் உள்ளத்திலிருக்கிற உன்னதத்தைச் சமுதாயம் புரிந்துகொள்ளாதே மீரா. பழி சுமத்தி வீழ்த்திவிடுமே'' என்று மட்டும் சொன்னேன்.

அவள் சிரித்தாள்.

என் மனதில் இருக்கிற உன்னதத்தை சமுதாயம் உதாசீனம் செய்யும் என்பதற்காக அது திரைபோட்டு மூடிவைக்கிற பல வீனங்களுக்கு நான் தோற்றுவிடவேண்டுமா அம்மா? ஆயிரம் இதயங்களின் பல வீனங்களுக்கு வக்காலத்து வாங்குகிற விதத்தில்தான் இந்தக் காலத்துச் சமுதாயம் இருக்கிறதே ஒழிய, ஒரு சில இதயங்களின் பலத்துக்கு மதிப்புக்கொடுக்கிற விதத்தில இல்லேயே! எல்லாச் சராசரி இதயங்களினுடையவும் பலவீனங்களுக்குப் போடப்படுகின்ற திரை எனக்குத் தேவையில்லேயம்மா; என் மனதுக்கும் ஆத்மாவுக்கும் சரி என்றுபடுகின்ற இந்த வழியில் வந்ழ்ந்து கடைசிக் கட்டத்தில் ஆண்டவன் முகத்தைத் தைரியமாக என்னல் பார்க்க முடியும் என்ருல் உங்களுக்கோ சமுதாயத்துக்கோ என் ஆத்மாவை விற்றுவிடுவதில் எந்தவித நியாயமுமே இல்லேயம்மா!"

நான் மீராவைப்பார்த்தேன். "ஆண்டவன் சந்நிதியில் யுகங்கள் கணக்கல்ல அம்மா; மனங்கள்தான் கணக்கு'' என்று சொல்கிற திலகவதியாராக அவளே உணர்ந்தேன். ஆசையுடன் வளர்த்த பெண் சந்நியாசினிபோல் போகிருளே என்ற துயரத்தையும் மீறி, இந்தத் தலேமுறையிலும் மென்மையான பெண்மை தனக்கே உரிய பலத்தோடு வாழ்கிறது என்று உணர்ந்த திருப்தி அலேயாக எழுகிறது. ★



ஈழத்தில் பெண் எழுத்தாளர்கள் மிகவும் குறைவு. இருக்கும் பெண் எழுத்தாளர்களும் எழுதுவது இப்போது மிகவும் குறைவு. இந்தச்சூழலில் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு வெளிவந்திருக்கும் 'கவிதா' எழுத்துலகில் அடி எடுத்து வைத்திருக்கிருர். 'வானெலி மஞ்சரி'யில் வெளிவந்த 'ஒரே ஜன்னலூடே' 'பவள மல்லிகை' ஆகிய சிறுகதைகள் இவரது எழுத்துக்கு உரைகல்லாகும்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம்

வெள்ளிநிலா கள்ளள்ளிச் சொரியும் மாலை
வேளை; அவள் எனதறையின் கதவை மெல்லத்
தள்ளி, நிலா முகம் நீட்டித் தமிழை யாழில்
தரும் குரலில், எனை நோக்கி, 'ஆமாம்! தாங்கள்
பள்ளியிலே கவிபுனையப் பயின்ற துண்டோ?
படித்திருப்பின் அதையெனக்கும் பாடஞ் சொல்லின்
தெள்ளுசுவைக் கவிதைசில செயலாம்!' என்றாள்
'தெரிந்தவற்றைக் கூறுகிறேன்; வரலாம்!' என்றேன்

'உயிர்' என்றேன் 'மெய்' என்றேன் 'உயிர்மெய் யெல்லாம்
உமக்கேதான் இன்று முதல் உடமை!' என்றாள்.
'பயிலுங்கள் குறில் நெடிலை' என்றேன்; அந்தப்
பாவை, 'இடை குறில், விழிகள் நெடிலாம்!' என்றாள்
அயர்வின்றி வல்லினத்தை அவளைக் கேட்டேன்
அவள் விழியைத் தன் மார்பில் அலைய விட்டாள்!
'முயலுங்கள் இடையினத்தை மொழிதற்' கென்றேன்
'முல்லையெனுங் கொடியினமிஃ துண்மை! என்றாள்!'

'மெல்லினத்தைச் சொல்லுங்கள்' எனலும், தன்பொன்
மேனியெலாம் அவ்வினத்தை உணரச் சொன்னாள்!
'நல்லதினிச் சீர்' என்றேன்; அவளோ, என்னை,
'நறையுண்ணச் சீரெதற்காம்?' என்று கேட்டாள்!
'இல்லையது காய்'........என்று தொடங்கினேனே
இடைவெட்டி, 'எல்லாமே கனிகள்' என்றாள்!
'தொல்லையிது பாடத்தை முடிப்போம்' என்றேன்
'தொடங்குங்கள் சுவையாம் பாடம்' என்றாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியின்றித் 'தொடை' என்றேன்; 'வழுவென் றாலும்
வழக்கிலதிற் பிழையில்லை வாழை!' என்றாள்.
'இழைகின்ற அணி' என்றேன்; 'இவைகள் தாமே!
எடுத்துவிடின் எமையொன்றும் உறுத்தா' என்று
களைந்தன்னாள் நகைகளையோர் புறத்தே வைத்தாள்.
'கவிதைக்கோர் கருத்தேடி உணர்ச்சி பொங்கத்
தளையுங்கள்' எனச் சொன்னேன்; அவளோ, என்னைத்
தழுவி, 'இதை விடப்பெரிய தளையே' தென்றாள்!

'பாவினுக்கு வெறியூட்டுங் குணமுண்' டென்றேன்
பவளவிதழ் சுவைத்ததனைப் பார்க்கச் சொன்னாள்!
'காவியமொன் றியற்றினதாற் புகழாம்' என்றேன்
'காணுங்கள் அதைத்திங்கள் பத்தால்' என்றாள்!
பூவியலாள் மார்போடு பொருதி நிற்கப்
புறங்காட்டல் ஆண்மைக்குப் புகழா? என்ன!
பாவியல்சொல் காரிகையை நழுவ விட்டுப்
படர்ந்திருந்த காரிகையைப் படிக்க லானேன்!

**எருவில் மூர்த்தி.**

**எருவில் மூர்த்தி**

உணர்ச்சிமிக்க கவிதை யாப்பதில் வல்லவர் கவிஞர் எருவில் மூர்த்தி. தமிழர் உரிமைப் போராட்ட காலத்தில் இளைஞர்களைத் தமது கவிதை மூலம் தட்டி எழுப்பிய இவர் இன்றையத் தமிழர் நிலை கண்டு மனம் நொந்துபோயிருக்கிறார். கண்பார்வை இழந்த நிலையிலும், தொடர்ந்து இலக்கியப்பணி புரிந்துவரும் இவர் தொண்டு மகத்தானது.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணபேதம்

அ. ஸ. அப்துஸ்ஸமது.

(ஊதா)

கொந்தளிக்கும் கடல்; சூறைக் காற்றின் கோரம்; அதில் அகப்பட்ட படகொன்று; திசை தெரியாத ஒரு பெருவெளியை வந்தடைகிறது. இந்த நிலையில் திகைத்து நின்றேன் நான்.

பற்றுக்கோடில்லாத கொடிபோல என் பெண்மனம், மனப்புயல் வீசும் பக்கமெல்லாம் ஆடிக்கொண்டிருந்தது.

நான் என் வாழ்வின் புகாந்தத்தில் நிற்பதாக உணர்கிறேன். வாழ்வுத் தேவதை தன் திருநடனத்தை, இவ்வாறு திடீரென முடித்துக்கொள்ளும் என்று நான் எண்ணவில்லை. என் கடந்தகால இன்ப வாழ்வு என் மனக்கண்முன் வர்ணக்குமிழியிட்டு விளையாடுகிறது. ஒரு கணத்தில் மலைபோல் எழுந்த அக்குமிழிகள், ஒவ்வொன்றாகத் தகர்ந்து, என்னைப்பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கின்றன.

ஆம்! றபீக்; அவனுடன் வாழ்ந்த அந்தப்பத்து வருடங்கள், என் உடலிலிருந்து உயிர்பிரியும் வரை மறக்கமுடியாதது. அந்நாட்களில் நான் அனுபவித்த இன்பங்களின் எக்காளம், என் வாழ்வு முழுவதும் என்னைச் சுற்றி சுற்றி ஒலித்துக் கொண்டிருக்கும்;

'ற்ர் ற்ர் ற்ர்' என்ற சப்தத்துடன் வீட்டின்முன்னால் வந்துநிற்கும் மொரிஸ்மைனர் கார்கள், அதிலிருந்து இறங்கிவரும், விருந்தினர்கள்; அவர்கள் தான் எத்தனை வகைப்பட்ட மனிதர்கள்! பொலிஸ் சார்ஜன்ட் சுந்தரலிங்கம், ஈஸ்டன் டெக்ஸ்டைல் முதலாளி றஹீம், பியூடி ஜுவல்லர்ஸ் நாதன், லங்கா சலுசல மனேஜர் முபாறக், இப்படிப் பல பெரிய புள்ளிகளும் இதில் அடங்குவர். இவர்களெல்லாம் ஏதாவது ஒரு ஜோலியை உண்டாக்கிக்கொண்டு ஏன் எனது வீட்டுக்கு அடிக்கடி வருகிறார்கள் என்பது எனக்குத்தெரியும்! ஆனால் தெரிந்தவை எல்லாவற்றையும் வாயைத் திறந்து சொல்லி விட முடியுமா? இவர்களது உறவுகளையெல்லாம் என்னால் தவிர்க்கவோ, எற்றுக்கொள்ளவோ முடியவில்லை. அவர்கள் எமது குடும்ப நலனில் அக்கறைகொண்டவர்களாகப் பின்னிப் பிணைந்துகொண்டனர். ஆனால் உண்மையில் லங்கா சலுசல மனேஜர் முபாறக், மிகவும் நல்ல மனிதர். அவர் 'சுபைதா' என்று என்னை அழைக்கும் போது அதில் எவ்வளவு கனிவு நிறைந்துள்ளது. நாதன் பெரிய நகைக் கடையின் உரிமையாளராகவிருப்பினும் கொஞ்சங்கூடப் பெருமையற்றவர். தாராளகுணம் படைத்தவர், என் கணவருக்கு ரொம்பவும் உதவியிருக்கிறார்.

எகிப்தின் எழிலரசி கிளியோ பாத்திரா சொன்னாள் 'என்னை எதிர்த்து வரும் எந்த முடியரசனின் போர்க்கலங்களும் எனது அழகு விழிகளின் முன் கூர்மழுங்கி, கை நழுவிக் கீழே விழுந்து விடும்' என்று. இது உண்மையாகவே இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏனெனில் என் அழகும், இளமைத் தோற்றமுமே இத்தனை மனிதர்களையெல்லாம் எமக்கு உதவும்படி செய்கிறது. என்னிடத்திலுள்ள இக்கவர்ச்சியோ, திறனே என் கணவருக்கு மிகவும் உபயோக



பழம்பெரும் எழுத்தாளர் ஜனாப். அ. ஸ. அப்துஸ்ஸமது ஈழத்து வாசகர்களுக்குப் புதியவரல்ல. வானொலி நாடகங்கள், இலக்கியக் கட்டுரைகள் நிறைய எழுதியுள்ள இவர் இலக்கிய சம்பந்தமான நூல்கள் நான்கும் இலக்கியப் பாடநூல்கள் ஐந்தும் வெளியிட்டுள்ளார். இஸ்லாமிய இலக்கியத் துறையில் மிகுந்த ஈடுபாடுள்ள இவர் தற்போது 'இஸ்லாமும் தமிழும்' என்ற ஒரு நூலை எழுதிவருகிறார்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானது. அவர் அதனை ஏன் ஆதாயப் படுத்தக்கூடாது?

முன்பும் ஒரு விவாகம் செய்தவளாகிய என்னை என் கணவர் விரும்பியதற்கும் இக் கவர்ச்சியே காரணமாகும் எனது நறுக்கு நறுக்கான கதைகள், சுழன்று சுழன்று புரளும் கண்கள், இதில் அவர் தன் உள்ளத்தையே பறிகொடுத்து விட்டதாக ஒரு நாள் என்னிடம் சொன்னார். அப்பொழுது நானடைந்த பெருமை! பூரிப்பு! என் வாழ்வில் இதுபோன்ற மகிழ்ச்சிகரமான கட்டங்கள் அனேகம்! இதனிடைய்ய எனது முதற் கணவனோடு நான் வாழ்ந்த அந்த நாட்கள்; வண்ணமில்லாத மலராக — ஒரு அசம்பாவித நிகழ்ச்சியாக — மங்கலான அந் நினைவுகள் இருக்கின்றன.

## மஞ்சள்

அவர் ஒரு மௌலவி. என்னை மிகவும் நேசித்தார். அன்பு காட்டினார். வரண்ட தரையில் நாட்டப்பட்டிருக்கும் ஒரு செடிக்கு தண்ணீர்மட்டும் ஊற்றிவிட்டால், அது அழகான வண்ண மலர்களைப் பூக்கும் என்று கருதுவது தாவர இயலறிவில்லாத ஒரு செயல் அல்லவா? உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள முடியாத வெறும் அன்பினால் யாருக்குப் பயன்? அதன் பொருள்தானென்ன? எனது இளமைத் துடிப்பின் கனவுகளை அவர் மறந்தேபோனார். கன்னிப் பருவத்தின் களிப்பு நிறைந்த கட்டங்கள் மணவறைக் கோலங்களோடு முற்றுப் பெறும் ஒன்றல்ல. எல்லாரையும்போல, எப்படியோ ஒரு வாழ்வை, நானும் வாழ்ந்துதான் கழிக்கவேண்டுமா?

பள்ளிவாசலுக்கும், ஊர்க்கடமைகளுக்கும் போய்விட்டு, எந்த நேரமெல்லாமோ, வீட்டுக்கு வருவார். கிரமமாக ஐந்து வேளையும் தொழ வேண்டுமென்று ஞானோபதேசம் செய்வார். இக்காலத்துப் பெண்களின் இடாம்பீக நாகரிகம் பற்றி கண்டித்துப் பேசுவார். அடிக்கடி மறுமை பற்றிப்பயங்கரமான கதைகள் சொல்வார். மனித வாழ்வின் சாஸ்வதமற்ற நிலையை உணர்த்துவார்.

இவையெல்லாம் எனக்கு வேண்டாத விவகாரங்கள். மலரின் பக்கத்தில் வட்டமிடும் வண்டுகளுக்கு தேன் தேவையா? சுவைகளின் அநித்தியமான உணர்வுகள் பற்றிய இதோபதேசம் தேவையா? வாழ்வு மாயை என்பது உலகில் எல்லோருக்குமே தெரிந்த உண்மை. அதனை எப்படி அனுபவித்து வெற்றி கொள்வது என்பதுதான் எல்லோருக்கும் புரியாத உண்மை. நெருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புச்சுடும் என்பது குழந்தைகளுக்கும் தெரியும். அந்தச் சூட்டில் எவை எவற்றை எப்படி எப்படி வேகவைத்துச் சுவையாக உண்ணலாம் என்று தெரிவதுதான் அறிவு. ஒரு பெண்ணின் தேவைகளையும் உணர்வுகளையும் புரிந்து கொள்ளாமல், அவளை மனைவியாக வைத்திருப்பது வீட்டின் முகப்பில், புலித்தோல் பொம்மையைச் செய்து அழகுக்காக வைத்திருப்பது போலாகும்.

மௌலவியின் சுரைக்காய்க் கீற்றுத் தாடி மீது வரவர எனக்கு எரிச்சல் அதிகமாயிற்று. அவருடைய குல்லாய் தொப்பியும், மக்காச் சால்வையும், சமூகத்தில் அவருக்கு ஒரு அந்தஸ்தை நிர்ணயிப்பதாக இருந்தாலும், என்னைப் பொறுத்தவரை ஒரு வெறுப்பை ஊட்டிற்று.

அன்று பின்னேரம்; நிலைக்கண்ணாடியின் முன் நின்று என் அழகிய தோற்றத்தை ஒருமுறை பார்த்து ரசித்தேன். சிரிக்கும் போது குமிழியிடும் எனது ரோஜாக் கன்னங்கள், எத்தனைபேரைப் பெருமூச்சுவிடச் செய்தது. எனது கொடியிடையையும், பொன்னுடலையும் தழுவத் துடித்த பெருங் கரங்கள் எத்தனை? இப்பொழுதோ நான் நாக்குருசி தெரியாதவனிடம் அமுதக் கலசமாக நின்றேன்.

எண்ணங்கள் வேருயின. உருவங்கள் துருவங்களாயின. மௌலவியின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. விவாகரத்துச் செய்து கொண்டு பிரிந்து கொண்டோம்.


## (கறுப்பு)

இந்த நிலையில் என் எண்ணங்களைப் புரிந்துகொள்பவராக, என் ஆசைகளை வட்டியும் முதலுமாகச் சேர்த்துத் தருபவராக, வந்து சேர்ந்தார் என் கணவர் றபீக்.

அவரது நண்பர்களுடன் நான் சரளமாகவும், சுதந்திரமாகவும் பழகுவதைக் கூட அனுமதித்தார். இதனல் அவருக்கு இலாபம் கூட இருந்தது. மேனுட்டில் மனைவியரை மாற்றிக்கொண்டு போல்றூம் டான்ஸ் ஆடுகிறுர்களே! நம் நாட்டில் மனைவியர்கள் நண்பர்களுடன் பழகுவதில் என்ன குடிமுழுகிப் போகும்? காலத்திற்கேற்ற நாகரிகமாக வாழத் தெரியாவிட்டால் இன்றைய சமூக வாழ்வின் பொருள்தான் என்ன?

ஆனல் என் கணவருக்கு நேர்ந்தகதி என் நெஞ்சம் அந்தப் பயங்கரத்திலிருந்து இன்னும் மீழவில்லை. என் வாழ்வில் இருள் படியச் செய்த அந்தச் சம்பவம்?

யானைக்குத்தன் உடலால் அழிவு, விட்டிலுக்குத் தன் கண்ணல் அழிவு, நாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குத் தன் காதால் அழிவு என்று சொல் வார்கள். என் கணவருக்கும் அவர் மித மிஞ்சி நேசித்த பெண் ஆசையால் அழிவு வந்தது. ஒரு பெண்ணின் தொடர்பினுல் ஆத்திரப்பட்ட அவரது நண்பர்களே ஒரு நாளிரவு தூரத்துக் கிராம மொன்றிற்கு அவரை அழைத்துப் போய் கொலை செய்து விட்டனர்.

என் வாழ்வு விழிகண் குருடாயிற்று. என் துடிக்கும் இதயம் வெறும் பாலைவன மாயிற்று. கரவன் கூட்டம் என்பார்வை யினின்றும் மறைந்துவிட்டது.

## (நீலம்)

அன்று மட்டக்களப்பு புகையிரத நிலை யத்தில் சனக்கூட்டம் திமுதிமுவென வழிந்து கொண்டிருந்தது. எனது தம்பி யையே துணையாகக்கொண்டு, நான் கொழும் புக்குப் போவதற்காக ஆயத்தமாக நின் றேன்.

என் கணவர் இறந்ததற்குப்பின் நான் முதன்முதலாக அன்றுதான் கண்ணுடியின் முன் நின்று 'டிறஸ்' செய்து கொண்டேன். தூய வெண்மை நிறப்பட்டுச் சேலை யொன்றை அணிந்து, வெள்ளை நிறச் சோளி யும் போட்டுக் கொண்டேன். காலில் இளம் சிவப்புச் செருப்பு. கையில் கறுப்பு நிறக் கைப்பை. கையில் சாதாரண ரேடியோ வளையல், கழுத்தில் மூன்றுபவுனில் ஒரு சங்கிலி. ஆனுல் இவ்வளவே என் அழகை எடுத்துக் காட்டப் போதுமானதாக இருந்த தற்கு நான் எவ்வகையில் குற்றமாவேன்? சேலையின் கறுப்பு நிறப்பட்டியும், சோளி யின் கைப்பட்டியும் என் அழகை கோடிட் டுக்காட்டிற்று. கைம்பெண் உடையைக் கூடக் கல்லூரி மாணவிகளைப்போல உடுத் திருப்பதாக என் ராத்தா, நான் பிர யாணம் புறப்படும் போது கூறினுள். அத னிடையே எனது நாற்பத்தி இரண்டு வயது அனுபவமுதிர்ச்சியும் என்முகத்தில் தோற் றுமலில்லையே, என்று நான் பதில் கூறி னேன்.

அக்கிராசனர் சின்ன மரைக்காயர், பிளாட்பார இரும்புத்தூணுேடு தூணுக, என்னையே பார்த்தபடி நிற்பதை நான் வெகுநேரத்தின் பின்புதான் கண்டேன். 'மச்சான்' என்று நானே அவரை முதலில் அழைத்தேன். அவர் எனக்கு மச்சான் முறையானவர். என்மீது அவருக்கு எப் போதுமே ஒரு தனிவிருப்பம். என்னை விவா கம் செய்து கொள்ளாத குறையை அவர் அடிக்கடி என்னிடம் கூறி வருந்துவார், இது ஆண்களுடைய சொல் ... அவர் கள் அனேக சர்தர்ப்பங்களில் பெண்களை மேசைபோலையாக விளையாட விரும்புகிருர் கள். அந்த மேசை இன்னொருவருடைய தாக இருக்கும் பட்சத்தில் ... ...

வைத்தவிழி மூடாமல் என்னையே உற் றுப்பார்த்த அக்கிராசனர் சின்ன மரைக் காயர், 'என்ன சுபைதா! எங்கு போக ணும்' என்று மிக அக்கறையோடு வின வினுர்.

'அவர்ர பேரில் உள்ள இலுக்குச்சேனைக் காணி விஷயமாகத்தான் நாளக்கிக் கோட் டுத்தவணை, கொழும்புக்குப் போகிறேன்'

'ஆ ஆ, ... ... ஒரு குழந்தை குட்டிய யாவது பெற்றிருந்தா இந்தத் தொல்லை யெல்லாம் இல்லையே! பாத்தீங்களா? அதன் விளைவு; சொத்துக்களுக்கு யார்யாரோ உரிமைகோரி உங்களையும் கோட்டுக்கு இழுக்கிறுங்க;' என்றுர் சின்ன மரைக்கார். நான் இவ்வாறு அலைந்து திரிவதில் அனு தாபப்படுபவர்போல அவர் காட்டிக் கொள்வது, எல்லாம் என் அன்பை சற்று இறுக்கமாகப் பெற்றுவிடவே என்பது எனக் குத் தெரியும்.

இரவு முழுவதும் அக்கிராசனர் தன் நெஞ்சின் ஆழத்திலிருந்த செய்திகளையெல் லாம் அகழ்ந்தெடுத்துக் கொட்டினுர். சுதந் திரமாக என்னுடன் கதைக்கக் கிடைத்த இச் சந்தர்ப்பம் அவருக்குப் பேரதிர்ஷ்ட மாக இருந்தது. அக்கிராசனர் போன்ற ஒரு பெரியமனிதருடைய உதவி இந்தக் காணி விவகாரம் போன்ற பல விஷயங்க ளுக்கு. எனக்குத் தேவைப்பட்டது.

மறுநாள், அட்வகேட்மாரைக் கண்டு பேசுவது முதல், பல உதவிகளை என்னே டிருந்து செய்தார் அக்கிராசனர். 'இந்தக் காணியை நீங்கள் பெற்றுக்கொள்ளும்வரை என்னுல் ஆன உதவிகளைச் செய்ய சித்த மாக இருக்கிறேன்' என்று அவர் கூறும் போது, மிக்க உணர்ச்சி வசப்பட்டவராக காணப்பட்டார். எனது அன்புக் கொடி படரும் கொழுகொழும்பாக அவர் ஆனுர்.

## (சிவப்பு)

என் வாழ்வு ஒரு நடன மண்டபமாக இருந்தது. ஆடுவதற்குச் சித்தமாக நான் நின்றேன். ஆனுல் நட்டுவனுர் இல்லாமல் நடனம் எப்படி ஆகும்? அக்கிராசனர் நட் டுவனுராக மாறிவருவதை என்னுல் மறுக் கவும் இயலாமலிருந்தது. ஆனுல் அவரைச் சுற்றியுள்ள பின்னங்கள் ..... ஒரு நீண்ட ... டின் மேலும் கீழும் எந்தப் பொதுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானத்தாலும் வெட்டிவிடுவிக்க முடியாததாகவிருந்தன.

அக்கிராசனர் சின்ன மரைக்காயருக்கு மீசை நரைத்து விட்டபடியால் ஆசையும் நரைத்துவிட்டதென்பது கருத்தல்ல. கச்சேரியில் கிளாக்கர் வேலை செய்த அவர், ஓய்வு பெற்று மறுவருடமே கிராமச் சங்கத் தேர்தலில் போட்டியிட்டு, அக்கிராசனரும் ஆனார். நிலபுலன்கள் நிறைய உள்ளவர். மனைவி மக்கள் பேரன் பேத்திவரை அனுபவித்து அலுத்துக் கொண்டவர். எனினும் புஷ் ஷேட்டும் சில்க் சால்வையும் அணிந்து, இருபுறமும் பஞ்சுப் பொதியாக மாறிக்கொண்டிருக்கும் தலைமயிருக்கு 'டை' போட்டு சீவி விட்டால், அவரது கிளீன் ஷேவ் முகத்தைப் பார்த்து ஐம்பது வயதுக்கே மதிக்கலாம்.

அக்கிராசன் பதவி, நிலபுலன் வருமானம். பென்சன் சம்பளம், எல்லாவற்றிற்கும் மேலாக என்னை அடைய வேண்டுமென்ற அவரது தணியாத ஆசை, இவற்றிற்கு முன்னால் இவையெல்லாம் பனிப்புகார். எனக்கும் நாற்பத்திரெண்டு வயது ஆகிறது. பார்வைக்கு முப்பதுக்கு மேல் எவரும் மதியார். இன்னும் இளமை குலையாத இவ்வழகை நான் ஏன் காட்டு நிலவாகக் கழிக்க வேண்டும்.? 'குழந்தை கூடப் பெறாமல் உன் அழகைச் சாசுவதமாக்கிக் கொண்டாய்' என்று அக்கிராசனர் அன்று கூறினாரே. அவருக்குத்தான் என்மீது எவ்வளவு கொள்ளை ஆசை. அவ்வாசையை நான் நிறைவேற்றுவதோடு, அவரை முதலாகக் கொண்டு என் பழைய வாழ்வின் ஜொலிப்பையும் ஆரம்பிக்கலாமே. அனாதரவான எனக்கு ஒரு ஆண்துணை வேண்டுமே! ஒரு தோட்டத்திலுள்ள மலரை ஆயிரம் பேர் ரசிப்பார்கள் மகரவும் வருவார்கள், ஆனால் தலைவிதியேயென்று தண்ணீர் ஊற்றுகிறவன் தோட்டக்காரன் மட்டுமே. நான் வீதியில் நிற்கும் புளியமரமாகி விடக்கூடாது.

சிலருக்குச் சில வர்ணங்கள் பிடிக்கும். சிலருக்கு எல்லா வர்ணங்களுமே பிடிக்கும். இந்த எல்லா வர்ணங்களையும் ஒரளவு அனுபவித்துப் பழகியவள் நான். ஒரு மௌலவீ, அவர் தந்த கட்டுப்பாடு நிறைந்த வாழ்வு, ஒரு வியாபாரி அவர் அளித்த சுதந்திரமான அனுபவங்கள், ஒரு அக்கிராசனர் அவர் தரப்போகும் கௌரவமான வாழ்வு; எத்தனை வர்ணங்கள் நிறைந்தது என் வாழ்வு என்றெண்ணுகையில் என் எழில்மேனி என்னைக் கைவிடாது என்று என் உள்ளம் பூரித்தது. முழு வர்ணங்களையுமே அனுபவிக்கப்போகும் புதுவாழ்வின் புது வர்ணங்களை என்மனம் அவாவி நின்றது.

## (பச்சை)

ஊரெல்லாம் எங்கள் விவாகத்தைப் பற்றி ஒரே பேச்சாகப் பேசிக்கொள்கிறார்களாம். மனிதன் கிழடு சென்றால் ஏன் கூனுண்டு, குனிந்து பொல்லூன்றி நடக்கிறான் தெரியுமா? அவன் வாழ்வை அனுபவித்த காலங்களில் சமூகத்தின் பார்வையில் அவ்வளவு தூரம் குனிந்து, நெளிந்து பழகிவிட்டதால் முதுகில் கூன் விழுகிறது என்று யாரோ ஒரு கதையில் எழுதி இருந்தது ஞாபகம் வருகிறது. நான் என் காலில் கொலிசத்தை மாட்டுவதற்காகவும், நேறந்தைப் பின்னல் பாவாடை, சேலைக் கொசுவத்தோடு புரள்வதைச் சரிசெய்து கொள்வதற்காகவுமே குனிகிறேன்.

இத்தோடு அன்று கிடைத்த மற்றோர் செய்தி என்னைக் கலங்கவே செய்தது ஆம். என் முந்திய கணவர் றபீக்கைக் கொலை செய்த மலேயா மாணிக்கத்திற்குத் தூக்குத் தண்டனைத் தீர்ப்பாயிற்றாம். ஒரு வாழ்வின் அஸ்தமனம் காரிருள் படியமுன்பே, மறுவாழ்வின் உதயம்; மனித வாழ்வின் விசித்திரங்கள் எவ்வளவு விநோதமாக இருக்கின்றன. நினைத்தவையெல்லாம் நடப்பதோ, நடப்பதெல்லாம் நினைத்ததோ அல்ல; அல்லவா?

எனது வீட்டு வராந்தாவில் நான் சலனமனத்தோடு ஊஞ்சலாடிக் கொண்டிருந்தேன். ஒற்றைக்கால் ஊஞ்சலிலிருக்க மற்றக்காலால் உந்தி ஆடிக்கொண்டிருந்த அக்காட்சியை எனது புதிய கணவர், எதிரே இருப்புக் கன்வஸில் இருந்தபடி பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். எனது மனச் சலனத்தை அவர் அறியாவண்ணம் அவரைப்பார்த்து நான் சிரித்துக் கொண்டிருந்தேன்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு சோடிக் காதற் புறாக்கள் நேரெதிரேயிருந்து, எம்மைப் பார்த்துக் கொண்டிருப்பது போல இருந்தது. சரியாக ஒரு வருடத்தின் முன் எனது முந்திய கணவர் இதனை வாங்கி வந்து சுவரில் மாட்டினார். அப் புறாக்களின் மணிக்கண்கள் மிகவும் பிரகாசமாக எனக்குத் தெரிந்தன. அதனை நேரெதிராகப் பார்க்க என் கண்கள் கூசின. என் இதயம் படபட வெனத் துடித்தது. ஊஞ்சலை விட்டெழுந்து, குசினிப்பக்கமாகச் சென்றேன்.

அவர் எதையோ இழந்தவர்போல என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

(யாவும் கற்பனை)

—★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கூர்கெட்ட வீதி

பண்ணிசைக்கும் பறவைகளைப்
பண்டமாக, குடிமக்கள்
உண்ணவெனக் கடைகளிலே
விற்றதை நான் கண்ணாரக்
கண்டேன்; கூர் கெட்ட வீதிக்
கடைகளில்தான் விற்றனர்காண்!

கண்டேனே புழுவாய்ந்த
கோலத்தைக் கோதுமையில்
உண்பொருளாய் குடி சனத்திற்(கு)
இன்றன்றோ கடைகளிலே!
இன்றன்றோ விற்பனைக்குக்
கூர்கெட்ட வீதியில்தான்

—கு. இராமச்சந்திரன்—

[Ralph Hodgson எழுதிய Stupidity Street என்ற
கவிதையின் தமிழாக்கம்.]



மொழிபெயர்ப்பு என்பது ஒரு சிரமமான கலை. அதிலும் கவிதை மொழிபெயர்ப்பு என்றால் இன்னும் சங்கடம். ஆங்கிலக் கவிதைகளை மூலத்தின் 'உயிர்' குன்றாது மொழிபெயர்ப்பதில் மிகவும் சமர்த்தர் மலையக எழுத்தாள அன்பர் கு. இராமச்சந்திரன். முன்னாள் ''செய்தி'' ஆசிரியராகவும், ''வீரகேசரி'' உதவி ஆசிரியராகவும் கடமையாற்றிய இவர் தமிழ், சிங்களம், மலையாளம், ஆங்கிலம் ஆகிய நான்கு பாஷைகளிலும் நிறைய இலக்கிய ஞானம் உள்ளவர், சிறந்த பேச்சாளர், நாடகாசிரியர், நடிகர், உழைப்பால் உயர்ந்தவர்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 150ல் முடிபுனைந்த நெடுமுடிக்கிள்ளியின் வாழ்க்கையிலே ஓர் புதிய திருப்பம்! அதன் பயனாக நாகநாட்டு இளவரசியின் வாழ்க்கையில் விபரீதம்! ஆமாம். ஈழத்து வரலாற்றினுக்கும் தமிழக வரலாற்றினுக்கும் இலக்கியப் பாலமாக அமையும்

சிறுகதை :

# கடல் தந்த காவலன்

அருள் செல்வநாயகம்.


## 1

மனதை மயக்கும் மாலைப் பொழுது. நாக நாட்டின் தலைநகரான மணிபுரத்துக் கடற்கரையிலே அலைகள் மோதிவிளையாடிக் கொண்டிருந்தன.

கலகலவென்ற பேரிரைச்சலாக இருந்த மணிபுரத்து வீதிகள் மாலைக் கதிரவனது அழகுக் கோலத்தினால் அமைதி கொள்ளலாயிற்று. மணிபுரத்தில் பூரண அமைதி நிலைக்கட்டும் என்பதுபோல் மாலைக் கதிரவன் அடிவானத்தில் பள்ளி கொண்டான். இருள் அரக்கனும் தன்கரங்களை நீட்டினான். மணிபுரத்திலே படிந்த இருளைப் போக்க மக்கள் இல்லங்களிலே தீபங்களை ஏற்றினார்கள். மணிபுரத்து வீதிகளிலே நிறுவப்பட்டிருந்த தீபத்தம்பங்களில் வீரர்கள் தீபந்தங்களைச் சொருகினார்கள்.

கடற்கரையையண்டி, அமைக்கப் பெற்றிருந்த மணிபுரத்து அரண்மனையெங்கும் கலகலப்பு! ஓர் புதுப் பொலிவு கொண்டு அரண்மனை துலங்கிக்கொண்டிருந்தது. ஆமாம். நாக நாட்டுமன்னர் வளைவணனின் ஒரேமகளான பீலிவளையின் பிறந்தநாள் விழாக்கொண்டாடிய சுவடுகள் இன்னும் அரண்மனையில் அழியவில்லை.

பகலெல்லாம் பிறந்தநாள் விழாவிலே கலந்து கொண்டமன்னர் வளைவணன் ஓய்வினைநாடி நிலாமுற்றத்தில் வந்தமர்ந்தார். வானத்தின் எழிற் கோலத்தையும், நீண்டு பரந்து விரிந்து கிடந்த கடற்பரப்பையும் பார்த்து ரசித்தவாறு தன்னையே மறக்கலானார்.



ஈழத்தின் முது பெரும் எழுத்தாளர் அருள், செல்வநாயகம். தமிழகத்திலும் ஈழத்திலும் வெளியான 45 சஞ்சிகைகளில் சுமார் 400க்கு மேற்பட்ட கதை, கட்டுரை; நாடகம் எழுதியிருக்கிறார். இந்திய, இலங்கை, மலாயா வானொலிகளில், நூறுக்குமேல் நாடக, பேச்சு நிகழ்ச்சிகள் அளித்திருக்கிறார். இவர் எழுதிய நூல்களும், தொகுப்பு நூல்களும் 17 வெளிவந்திருக்கின்றன. 3 நூல்களும் வெளிவர இருக்கின்றன. விபுலாநந்த இலக்கியத்தைக் கட்டி எழுப்பியவர். சென்னைத் தமிழாராய்ச்சி மகா நாட்டில் 'சீர்பாதகுலம்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை இவரால் வாசிக்கப்பட்டது.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னர் வளைவணன் இயற்கை உணர்விலே, லயித்தவாறு இந்த உலகையே மறந்து மோனநிலையிலே அமிழ்ந்தவர் "அப்பா" என்ற குரல் ஒலியினால் விழிப்படைந்தார்.

கட்டழகுக் காரிகையான பீலிவளை புன்முறுவல் தவழநிற்கவும் ஏறிட்டுநோக்கினார்.

"இந்த நிலா முற்றத்திலே அமர்ந்து கொண்டு, கொந்தளிக்கும் கடலிலும், எல்லையில்லாத நெடுவானத்திலும் நிதமும் என்னப்பா புதுமையைக் காண்கிறீர்கள்?" எனக்கூறிய பீலிவளை தந்தைக்குப் பக்கத்திலே அமர்ந்தாள்.

"வளைவணன் என்று நாக நாட்டின் செங்கோலைக் கையிலேந்தினாரோ, அன்று முதலாக இந்த நிலா முற்றத்திலே சில நாழிகைப் பொழுதாதல் வந்தமரத் தவறுவதில்லை கொந்தளிக்கும் கடலிலும், எல்லையில்லாத நெடு வானத்திலும் நான் காணும் புதுமைகள் தானம்மா, இந்த நாட்டு அரசியல் சிக்கல்களை விடுவிக்கின்றன. இயற்கையின் இனிய நினைவில், மயங்கிய வேளையிலேதான் எனக்குப் புதுப்புது வழிகள் பிறக்கின்றன" என்றார் வளைவணன்.

"இயற்கையின் இனிய நினைவுகளை தினமும் பார்ப்பதனால் அலுப்புத் தோன்றாதா அப்பா?"

"அலுப்பே தோன்றாது மகளே! பார்க்கப் பார்க்க அழகு மேலோங்கவே செய்யும். இந்த நிலா முற்றத்திலேதான் நீ பிறந்தவுடன் உன்னைப்பார்த்தேன். பிறந்த மதலையாக அன்று நின்ற நீ இன்று பதினெட்டு வயதுப் பருவமங்கையாக மலர்ந்து நிற்கிறாய். உன் அழகுஅன்று முதல் இன்று வரையும் மலர்ச்சி பெற்றுக் கொண்டே வந்திருக்கிறது. உன் அழகைப் பார்ப்பதில் எனக்கு அலுப்புத் தோன்றுகிறதா? அதே போற்றான் இயற்கையின் இனிய கொடைகளைப் பார்த்து அனுபவித்துக் கொண்டு வருவதில் அழகு மலர்ந்துகொண்டே வருகிறது. நான் மன்னனுக்கு மகனாகப் பிறந்துவிட்டேன் அப்படியில்லாமல் ஓர் கவிஞனாகப்பிறந்திருந்தால்......"

"இயற்கை எழிலைப்பற்றி அழகிய காவியங்கள் பல படைத்திருப்பீர்கள். அப்படித்தானே அப்பா"

"ஆமாம் மகளே! இயற்கையைப் பார்த்துப் பார்த்து அதன் அழகிலே ஒன்றுபட்டு விடுவேன். என்வாழ்நாள்முழுவதும் இயற்கையின் அழகுக் கோலத்தில் மயங்கிக் கொண்டேயிருப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியானுல் எனக்கு மட்டும் ஏன் அப்பா அந்தப் பாக்கியத்தைத் தர மறுக்கிறீர்கள்?"

'பீலிவளை! என்னம்மா சொல்கிருய் நீ?'

"அப்பா, நீலப்பட்டாடையை மிதக்க விட்டாற்போன்ற இந்தக் கடல்பரப்பைப் பார்த்துக் கொண்டிருக்கவே மனதுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது. இந்தக் கடலலைகளின்மேல் நமது உல்லாசப்படகில் சென்ருல் எவ்வளவு குதூகலமாகஇருக்கும்? சாதாரண மீனவர்கள் அனுபவிக்கும் சந்தோஷம் மன்னன் மகளுக்கு இல்லையே!"

"பீலிவளை!"

திடீரென்று உணர்ச்சிவசப்பட்டார் மன்னர். உணர்ச்சித்திணறலின் மத்தியில் வார்த்தைகள் தட்டுத்தடுமாறி வெளிவந்தன.

"பீலிவளை! என் செல்வ மகளே! உன் தலைவிதி அது. இனியும் நான் அந்த இரகசியத்தை உன்னிடமிருந்து மறைக்க விரும்பவில்லை. உண்மையை இப்போது சொல்கிறேன். மகளே! நீ பிறந்தபோது உன் ஜாதகத்தைக் கணித்த சோதிடன் சமுத்திரப் பிரயாணத்திஞல் உனக்கு எதிர்பாராத சோதனை எற்படும் என்று கூறி வைத்தான். சாதாரண பெண் என்ருல் அதைப் பொருட்படுத்தாமல் இருக்கலாம். ஆனுல் அரசகுமாரியான உன்னைப் பொறுத்தவரை அப்படியெல்லாம் விஷப்பரீட்சை செய்யலாமா?"

''அப்பா! எல்லாம் சோதிடர்கள் சொல்வது போலவே நடந்துவிடுகிறதா? நமது உல்லாசக்கலம் எத்தனைதடவைதான் கடல்மீது பிரயாணம் செய்துவிட்டது. அப்போதெல்லாம் ஏற்படாத ஆபத்து நான் செல்வதனுல் மட்டும் ஏற்பட்டுவிடுமா'.?

''என்னைக் குழப்பாதே மகளே!''

''அப்பா இன்று என் பிறந்த நாள். கோலாகலமான விழா நடந்தேறியிருக்கிறது. இன்ருவது நான் ஆசைப்படுவது நிறைவேருது போனுல் ... ...''

பீலிவளையின் கண்களில் நீர் துளிக்கப் பார்த்தது.

மன்னரால் அதைப் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை அந்தநேரத்தில் அவர் இதயத்தில் சுரந்த பாச உணர்வு இத்தனை நாள் கட்டிக் காத்துவந்த கண்டிப்பையும் வைராக்கியத்தையும் சிதறடித்துவிட்டது. மனம் இளகி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரியம்மா... சரி... சரி உன் இஷ்டம் போலவே இன்று நீ உல்லாசக்கலத்தில் சென்று கடல்வளம் கண்டுவரலாம் ...''

மன்னர் வார்த்தையை முடிக்கவில்லை. அதற்குள் சிட்டாகப் பறந்து சென்றாள் பீலிவளை.

* * *

ராஜஹம்ஸம் என்று வர்ணிக்கப்படும் அந்த உல்லாசக்கலம் ஒரு அன்னப்பட்சியைப்போன்று அசைந்தாடிக் கொண்டு சென்றது. அலைகளின் தாளத்திற்கேற்ப அந்தப்படகு எம்பி எம்பித் தவழ்ந்த போதெல்லாம், தலாட்டின் மயக்கநிலையில் கிறிங்கிப் போனாள் பீலிவளை.

அவர்களைச் சுற்றிச் சேடியர் பலர் நின்றனர். இவர்களைத்தவிரக் கப்பல் பணியாட்கள் பலர் மிகவும் சுறுசுறுப்பாகவும் உல்லாசமாகவும் பாய்மரக்கொடிகளை ஏற்றி இறக்கிக் கலத்தைச் செலுத்திக்கொண்டிருந்தனர்.

அடிக்கடி கப்பலிலிருந்து வெண்கலமணிகளை உருட்டி விட்டாற்போல் பீலிவளையின் சிரிப்பொலி கலகலவெனக் கேட்டுக்கொண்டேயிருந்தது. அவளுக்கு இது புது அனுபவம். முதல் அனுபவம்.

அப்பாடா! ஒருவழியாகக் கடல் பிரயாணத்தை முடித்துக்கொண்டு உல்லாசக் கலம் துறைமுகத்துக்குத் திரும்ப ஆயத்தமானது.

''அப்பா எப்படிப் பயந்து போனார்!'' என்று பீலிவளை தன் சேடிகளிடம் சொல்லிச் சொல்லிச் சிரித்துக் கொட்டினாள்.

அந்தச் சிரிப்புக்குப் போட்டியாக ஒலி செய்வது போல் படீரென்று ஒரு மின்னல் வெட்டிமின்னியது. அவ்வளவுதான் மின் வெட்டும் நேரத்தில் வானமெங்கும் கறுத்து மேகம்மூடிச் சிறிது நேரத்தில் பலத்த இடி முழக்கத்துடன் சோவென்று மழை கொட்டியது. கப்பல் பணியாட்களால் கப்பலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கப்பல் பேயாட்டம் ஆடியது.

கடைசியில், அரண்மனைச் சோதிடன் கூறியது பலித்தேவிட்டது. ஒரு பெரும் அலை வந்து கப்பலில் மோதிக் கப்பலைச் சுக்கு நூறாக்கியது. அந்தரத்தில் தூக்கியெறியப்பட்ட பீலிவளை தொப்பென்று கடலில் வீழ்ந்தாள். நீண்டு மின்னிய ஒரு மின்னலின் வெளிச்சத்தில் பீலிவளை, உடைந்த கப்பலின் ஒரு பகுதியைப் பற்றிக்கொண்டு மிதப்பது தெரிந்தது.


# 2

கி. பி. 150.

சோழநாட்டு அரியணையில் நெடுமுடிக் கிள்ளி அமர்ந்தான். சோழநாட்டு அரியணை தங்களுக்கே உரிமையுடையதென்று ஒன்பது பேர்கள் எழுந்தார்கள். அவர்களது எழுச்சி பெரும் போராக மூண்டது.

நெடுமுடிக்கிள்ளியின் தந்தையும், சேரமன்னன் நெடுஞ்சேரலாதனது மனைவியான நற்சோணையும் உடன்பிறந்தவர்கள். அதன் பயனாகச் சேரமன்னன் செங்குட்டுவன், மைத்துனன் நெடுமுடிக்கிள்ளிக்காகப் படை நடத்தி வந்து, நேர்வாயில் என்னுமிடத்தில் பங்காளிகள் அனைவரையும் வென்றி கொண்டு நெடுமுடிக்கிள்ளிக்குச் சோழநாட்டு அரியணையை வழங்கினான். அவனுடைய மகன்தான் 'மணிமேகலை'யில் குறிப்பிடப்படும் உதயகுமாரன்.

உதயகுமாரன் வளர்ந்து கட்டிளங் காளையானபோது, மணிமேகலையைக்கண்டு காதல் கொண்டான். மணிமேகலையை எவ்வகையிலேனும் அடைய உறுதி பூண்டு அவளையே பின் தொடர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயகுமாரனிடமிருந்து தப்புவதற்காக மணிமேகலை காயசண்டிகையின் உருவைக் கொண்டாள். காயசண்டிகையின் உருவில் மணிமேகலை இருப்பதை அறிந்து உதயகுமாரன் அவளை வழிமறித்தான். உதயகுமாரனிடம் இருந்து தப்புவதற்காக மணிமேகலை, உதயகுமாரனுக்கு அறிவுரைகள் புகன்ருள். இதனைக் காயசண்டிகையின் கணவனுன காஞ்சனன் தவருகமதிப்பிட்டு, தனது வாளினுக்கு உதயகுமாரனை இரையாக்கினுன்.

நீதிதவருது செங்கோல் செலுத்தும் சோழ குலப் பரம்பரையிலே வந்த நெடுமுடிக்கிள்ளி, தன்மகனுக்கு ஏற்பட்ட மரணம் நியாயமான தென்றே கருதினுன், தான் வழங்க வேண்டிய நீதியைக் காஞ்சனன் வழங்கி சோழகுல நீதியை நிலைநாட்டிவிட்டானென்று மனம் தேறினுன் நெடுமுடிக்கிள்ளி. இருந்தாலும் புத்திர சோகம் அவனை மன நிம்மதி இழக்கச் செய்தது.

புன்னை மரச் சோலையில் மனநிம்மதி காணவந்த மன்னவன் நெடுமுடிக்கிள்ளியின் கண்கள் வியப்பால் விரிந்தன. தான் காண்பது கனவுதானேவென ஐயுற்ருன்.

புன்னைமர மொன்றிலே சாய்ந்தவாறு ஒயிலாக நின்று கொண்டிருந்தாள் ஒரு மங்கை. அவள்மீது பதிந்துவிட்ட கண்களை மன்னனல் பெயர்க்கவே முடியவில்லை.

மன்னன் நெடுமுடிக்கிள்ளியின் வாழ்க்கைப் பாதையிலே, இதுவரை காணக் கிடைக்காத புதுமலர் அவள். கன்னிச் சிறையை விடுவிக்காத எழிற் கோலம். மன அமைதியை நாடிவந்த மன்னனுக்கு அவள் மனக் கொதிப்பை ஏற்படுத்தி விட்டாள்.

எத்தனை நாழிகைப் பொழுதுதான் அவளைச் சதாபார்த்துக்கொண்டேயிருப்பது அவளது பேரழகு அவனைக் காந்தம்போற் கவர்ந்திழுத்தது. அவளை நோக்கிச் சென்ருன்.

''பெண்ணே நீ யார்? உன்னை அறிந்து கொள்ளலாமா?'' என்று மன்னன் கேட்டான்.

அவள் பேசவில்லை. ஆனல் மன்னவனைப் பார்த்துப் புன் முறுவலைத் தவழ விட்டாள்.

அவளது மௌனம் மன்னனைக் கொல்லாமல் கொன்றது. ஆகவே மன்னன் 'நீ பேசாமடந்தையோ?...' எனக் கேட்டான்.

அவள் கலீரென்று சிரித்தாள். அந்தச் சிரிப்பொலியே மன்னனைப் பேதலிக்கச் செய்தது. அவளை அறிந்துகொள்ளத்துடித்த மன்னன் ''நீ யார்? எந்தநாட்டைச் சேர்ந்தவள். என்மனதை அலைக்கழிக்காமல் சொல்'' என வேண்டினுன்.

அதற்கும் அவள் பேசவில்லை. புன்முறுவலை வீசி மன்னனை அலைக்கழிக்கவே செய்தாள்.

''உன்னைப்பற்றிக்கூற விரும்பாவிட்டால் விட்டுவிடு. ஆனல் உனது பெயரையாவுதல் என்மனம் குளிரச் சொல்லமாட்டாயா?'' என்று மன்னன் குழைந்தான்.


''என் பெயர் பீலிவளை''

''பீலிவளை ... '' என்ற மன்னன் தன் உள்ளத்தையே திறந்து காட்டினுன். தன்னைக் கந்தர்வ மணம் புரிந்துகொள்ளும்படி வேண்டினுன்.

சோழ மன்னனைக்கண்டதும், பீலிவளை தனது மனதையே பறிகொடுத்திருந்தாள். ஆகவே ''கந்தர்வமணம் செய்ய ஓர் நிபந்தனை!'' என்ருள் வாய்திறந்து.

''ஒன்றென்ன! ஓராயிரம் நிபந்தனைகளையும் சோழமன்னவன் ஏற்றுக் கொள்வான் .. ''

''நான் யார்? எந்தநாட்டைச் சேர்ந்தவள் என்ற விபரங்களை ஒருபோதும் கேட்க மாட்டேனென்று உறுதியளிக்க வேண்டும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீ அவ்வாறு விரும்பினால், நான் உன்னைப்பற்றிய விபரங்களைக் கேட்கமாட்டேன். இது உறுதி'' என்ற மன்னவன் அவளது மென்கரத்தைப் பற்றித் தனது கணையாழியைப் போட்டான். அவ்வளவு தான். பீலிவளை கொடியென மன்னனது பரந்த மார்பிலே தஞ்சம் புகுந்தாள்.

# 3

வானத்தில் மோகன முழுமதி பவனி வந்து கொண்டிருந்தது. அரண்மனை நிலா முற்றத்திற்கு வந்த மகாராணி வாசமயில், மோகன முழுமதியைப் பார்த்தாள்.

மனதைக் கொள்ளை கொள்ளும் மோகன முழுமதியைப் பார்த்ததும், வாசமயிலுக்குத் தனது ஒரே பேறான மகள் பீலிவளையின் நினைவு எழுந்தது.

கடந்துபோன முழுமதிநாளிலே புறப்பட்டுச் சென்றவள் பீலிவளை என்றதை எண்ணிப் பார்த்த வாசமயிலின் மனத்தில் ஓர் திங்கள் கடந்து விட்டதென்ற எண்ணம் தோன்றியது. அதனால் மகளைப் பற்றிய கவலை வாசமயிலுக்குப் படரலாயிற்று.

இரண்டொரு நாளிலே பார்த்து முடிக்கவேண்டிய நாகநாட்டுக் கடல்வளத்தைத்காண ஓர் திங்கட்பொழுது! ஏதேனும் விபரீதத்தைக் கடல் ஏற்படுத்தி விட்டதோ என்று வாசமயில் நினைத்தபோது அவளது உடம்பு நடுநடுங்கியது.

உள்ளத்தில் ஏற்பட்ட கவலையையும், உடல் நடுக்கத்தையும் தீர்க்கும் பொருட்டு ''சுவாமி'' என்று குரல் கொடுத்தாள்.

மோகன முழுமதியின் குளுமையிலே, தன்னைமறந்திருந்த நாகநாட்டு மன்னன் வளைவணன், குரல் ஒலியினால் விழிப்படைந்து மனையாளை நோக்கினார்.

மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும் நிலவொளியிலே, வாசமயிலின் முகத்தில் ஊடாடிய துன்பச் சாயலைக் கண்டு திடுக்கிட்ட வளைவணன். ''தேவி '' என்றான்.

''முழுமதியும் வந்துவிட்டது. நம் குழந்தையும் சென்று ஓர் திங்கள் பொழுதாகி விட்டதே......''

''பீலிவளையைச் சொல்கிறாயா? அவளென்ன சின்னக் குழந்தையா? தனியாக அவள் செல்லவில்லையே! நமது மரக்கலத்தில் சென்றிருக்கிறாள். துணைக்கு எத்தனையோ பேர்கள் கலத்தில் இருக்கிறார்களே...''

''துணைக்குப் பலர் இருக்கலாம். ஆனால் நாகநாட்டுக்கடல் வளத்தைக் கண்டுகளிக்க ஓர் திங்கள் பொழுது வேண்டியதில்லையே''

''அப்படியென்றால் ... ... ?''

''பீலிவளை சென்ற கலம் ஒருக்கால் காற்றில் ஒதுங்குண்டு சென்றுவிட்டதோ? எனக்கென்றால் கவலையாகவே இருக்கிறது''

''கடல் பீலிவளைக்குத் துன்பம் செய்யாது தேவி...''

''கடல் துன்பம் செய்யவில்லை யென்றால், அவள் இதுவரை மணிபுரத்தினுக்குத் திரும்பி இருக்க வேண்டும்!''

''ஆமாம்'' என்ற வளைவணனுக்குப் பீலிவளையைப்பற்றியகவலை எழவும் உடனடியாக அரண்மனை நிமித்திகனை வரவழைத்தார்.

''நிமித்திகரே! பீலிவளையின் பிறந்த தினக்குறிப்பு ...''

''இருக்கிறது மன்னவா! தாங்கள் அழைக்கவும் கையுடனே கொண்டு வந்திருக்கிறேன்.''

''நல்லது பீலிவளையின் தற்பொழுதையப்பலன் எப்படி இருக்கிறது?''

''இதோ கணித்துச் சொல்கிறேன்'' என்ற நிமித்திகர் குறிப்பினைப் பார்க்கத் தொடங்கினார்.

நிமித்திகரது வாயிலிருந்து எத்தகைய வார்த்தைகள் வரப்போகின்றன வென்று ஆவலிலே வாசமயில் அவரையே நோக்கி நின்றாள்.

கோள்களைக்கணித்துக் கொண்ட நிமித்திகர், ''மன்னவா! இளவரசியார் வடக்கிலுள்ள தமிழ் நாட்டில் இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கவேண்டும்'' என்றார்.

''தமிழ்நாட்டிலா?'' என்று வியந்தார் வளைவணன்.

''தமிழ்நாடென்றால் எந்தநாடு நிமித்திகரே?'' எனக்கேட்டாள் வாசமயில்.

''மகாராணி! கடற்கரையை யண்டிய நாடாக இருக்கவேண்டும். அதிலும் கடற்கரைப் பட்டணத்தில் கணவனுடன்தான் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்''

நிமித்திகரின் வார்த்தைகள் அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சியைக் கொடுத்தது மன்னர் வளைவணருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மன்னவா! இளவரசியார் ஆரிய குலத்து மன்னவனொருவனைச்சார்ந்து காந்தர்வமணம் செய்துள்ளார். அதன் பயனைக் கருவுற்றுக் கொண்டு நாக நாட்டினுக்கு மீண்டும் வருவாள்" என்றார் நிமித்திகர்.

நிமித்திகரின் வார்த்தைகளைக் கேட்ட வளைவணன் எதுவுமே பேசவில்லை. அப்படியே இருக்கையில் சாய்ந்து விட்டார். சந்தர்ப்பத்தை நோக்கிய நிமித்திகர்,

''மன்னா! இளவரசியார் பிறந்த வேளையிலே பலன்கணித்துக் கூறினேன். தாங்கள் ஒருக்கால் மறந்திருக்கலாம்''

''ஆமாம் ... ... ஆமாம் ... ... ''

''சுவாமி! நமது குழந்தையின் வருங் காலம் இருள் சூழ்ந்ததாகி விடுமே! ...''

''தேவி! விதிவலிமையுடையது. பீலிவளையின் தலைவிதி அப்படியென்றால், நடந்தேதீரும். விதிப்படி நடைபெறத்தானே அவள்கடல்வளம் காணவென்று புறப்பட்டாள். கருவுற்றாலும் அவள் திம்ருபவும் நாக நாட்டினுக்கு நலமாக வந்தாலே போதுமானது. இந்த அரண்மனையில் அவள் வளைய வந்து கொண்டிருந்தாலே போதுமானது'' என்றார் வளைவணர்.

''குழந்தை நலமாக வந்து சேரட்டும்'' என்றாள் வாசமயில்

# 4

காலச்சக்கரம் சுழன்றது.

ஆண்டுகள் சில கழிந்தன.

பீலிவளை இப்போதும் அந்த அரண்மனை உப்பரிகையில் நின்று கொண்டு நீலப் பட்டாடை விரித்ததுபோன்ற கடலைநோக்கத்தான் செய்கிறாள். ஆனால் சில ஆண்டுகளுக்குமுன், தன் பிறந்த நாள்விழாவிலே, கடல் அலைகள் அவள் உள்ளத்தில் எழுப்பிய உணர்ச்சிகளுக்கும் இப்போது அவை எழுப்பும் உணர்ச்சிகளுக்கும் நிரம்ப வேறுபாடு இருந்தது.

கணவனைப் பிரிந்து பெற்றோரிடம் வந்துவிட்ட பீலிவளைக்கு இப்போது எதிலுமே பற்றில்லை. கடல்வளம்காணும் ஆசையோ, உல்லாசக் கலத்தில் பிரயாணம் செய்யும் எண்ணமோ அவளுக்கு இப்போது இல்லை, சேடியருடன் விளையாடவோ, அரண்மனைக் கேளிக்கையில் ஈடுபடவோ இப்போது அவளுக்கு மனமில்லை.

ஒரு திங்கள் பொழுது மட்டும் தான் அவள் தன் கணவனுடன் ஒன்றியிருந்தாள். சோழ நாட்டில் புன்னைமரச் சோலையில் அவள் கழித்த அந்த ஒரு திங்கள் பொழுதில் அனுபவித்த இன்பங்களை இரைமீட்டு அசைபோடுவதே இப்போது அவளுக்குள்ள ஒரே பொழுது போக்கு.

சோழ நாட்டுக்கும் நாக நாட்டுக்குமிடையே பரந்து விரிந்திருக்கும் அந்த மாபெரும் சமுத்திரம் அவள் இதய உணர்ச்சிகளுக்கு இரங்குவதாயில்லை.

அடிவானத்துக்கும் அப்பால் உள்ள ஒரு கற்பனை உலகில் அவள் மனம் லயித்திருந்தபோது—

'' அம்மா! அம்மா! ''

யாழினும் இனிதாய் ஒலித்த அந்த மழலைக்குரல் அவள் சிந்தனையைக் கலைத்தது.

''மகனே!'' என்று கூறியபடி அந்த மழலைச் செல்வத்தைத் தன் மார்போடு வாரியணைத்துக்கொண்டாள் பீலிவளை. எவ்வளவு முயன்றும் தன் கண்கள் குளமாவதைத் தடுக்க முடியவில்லை அவளால்.

''அப்பா வந்துவிட்டாரா அம்மா?'' என்று கேட்டான் குழந்தை.

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியது போன்றிருந்தது அந்தக் கேள்வி.

குழந்தை அப்பாவைத் தேடும்போதெல்லாம் எதை எதையோ சொல்லி அவன் கவனத்தைத் திருப்பி வந்தாள் பீலிவளை. இப்போது —

* * *

நீண்ட நாட்களாகத் தன் சிந்தனையிலே நெருடிக் கொண்டிருந்த எண்ணத்தைச் செயலாக்கத் துணிந்து விட்டாள் பீலிவளை.

மகனை எப்படியும் தந்தையுடன் சேர்த்துவிடவேண்டும். காதற் கணவனோடு கருத்தொருமித்து வாழும் பாக்கியம் தனக்குக் கிடைக்காதபடி விதி சதி செய்து விட்டது. ஆனால் தந்தையையும் தனயனையும் பிரித்து வைக்கும் பாவத்தை நான் செய்ய வேண்டாம். இப்படி எண்ணினாள் பீலிவளை.

ஏற்கனவே திட்டமிட்டபடி, யாருக்கும் தெரியாதவாறு தன் குழந்தையுடன் நாக நாட்டுத்துறைமுகத்துக்கு வந்தாள் பீலிவளை. சோழ நாட்டு வணிகக்கப்பல்கள் பல துறைமுகத்தை நிறைத்துக் கொண்டு நின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பளச் செட்டி என்ற சோழநாட்டு வணிகன் அவளுக்கு உதவ முன் வந்தான்.

அவனிடம் தன் குழந்தையைக் கொடுத்து, சோழ மன்னன் நெடுமுடிக் கிள்ளியிடம் குழந்தையை ஒப்படைக்கும் படி வேண்டிக் கொண்டாள் பீலிவளை.

அந்த வாணிகக்கப்பல் கண்ணுக்கெட்டியதூரம் சென்று மறையும்வரை அதையே பார்த்துக் கொண்டிருந்த பீலிவளையின் கண்களில் இரண்டு நீர்மணிகள் துளித்து விழுந்தன.

'கடல் அன்னையே! நீயே என்னை என் கணவரிடம் சேர்ப்பித்தாய். அதுபோலவே என் குழந்தையையும் என் கணவனிடம் சேர்ப்பித்துவிடு' என்று மானசீகமாக அவள் உள்ளம் பிரார்த்தித்தது.

அவள் பிரார்த்தனை வீண்போகவில்லை.

'அதுபோலவே' என்ற வேண்டுகோளை கடல் அன்னை அப்படியே நிறைவேற்றி வைத்தாள்.

ஆம். பீலிவளையை நடுக்கடலில் பந்தாடிய புயல்காற்று அவள் புதல்வனையும் அப்படியே பந்தாடச் செய்தது. நள்ளிரவில் சீறியெழுந்த புயல்காற்று அந்த மரக்கலத்தைச் சுக்கு நூறாக்கியது. தப்பிப்பிழைத்த கம்பளச் செட்டியும் வேறு சிலரும் எவ்வளவு தேடியும் குழந்தை அகப்படவேயில்லை.

*    *    *

''அப்படியா?'' என்று சீறினான் மன்னன் நெடுமுடிக்கிள்ளி. அவன் முன் நின்று கொண்டிருந்த கம்பளச் செட்டியும் மற்றும் வணிகரும் வெடவெட என்று நடுங்கிக்கொண்டிருந்தனர்.

''தேடுங்கள்! காவிரிப்பூம் பட்டினத்தின் கடற்கரை எங்கும் ஒரு இம்மியும் இடைவெளியில்லாமல் தேடுங்கள். விரையுங்கள். என் செல்வத்தைக் கண்டுபிடித்து என்னிடம் ஒப்படைப்பவர்களுக்கு இராச்சியத்தில் பாதியையே தந்து விடுகிறேன். தேடுங்கள்! தேடுங்கள்!''

ஆணையிட்டான் மன்னன்

சோழ நாட்டுப் படைவீரர்கள் அத்தனைபேரும் காவிரிப்பூம் பட்டனக் கடற்கரையை சல்லடைபோட்டுத் தேடினர் ஆனால் குழந்தை அகப்படவேயில்லை.

மன்னன் நெடுமுடிக்கிள்ளிக்கு மனைவியைப் பிரிந்த சோகத்துடன் இப்போது புத்திர சோகமும் சேர்ந்து கொண்டது. அந்த மனக்குழப்பத்தில் தன் கடமைகளை மறந்தான் மன்னன். ஆண்டுதோறும் செய்துவந்த இந்திரவிழாவையும் அவ்வாண்டு செய்ய மறந்தான். இந்திரவிழா நிறுத்தப்பட்டால் பூம்புகார் நகரைக் கடல் கொள்ளும் என்ற மணிமேகலா தெய்வத்தின் சாபத்தையும் அவன் மறந்தான்.

திடீரென ஒரு நாள் கடல் பொங்கியது. மணிமேகலா தெய்வத்தின் சாபம் பலித்துவிட்டது. கடல் பொங்கிப் பூம்புகார் நகருள் புகுந்து அதன் பெரும் பகுதியை விழுங்கி ஏப்பமிட்டு அமைதியடைந்த பின், அந்த மயான அமைதியைக்கிழித்துக் கொண்டு ஒரு குரல் ஒலித்தது.

'' அப்பா! ... ... அப்பா! ''

அந்தக் குரல் கேட்டு, வலை உதறிக் கொண்டிருந்த சில மீனவர்கள் அந்தப் பக்கம் ஓடினார்கள். அங்கே.—

ஒரு பச்சிளம் பாலகன் — தொண்டைக் கொடிகளில் சிக்குண்டு மிதந்து கொண்டிருந்தான்

அவன்தான் மன்னன் மகன் — இளவரசன், என்பதை யாரும் சொல்லித்தர வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அந்தப் பால் மணம் மாறாத முகத்தில் ஒளிவீசிய ராஜகளையே அதைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டியது.

கடலிலே கொந்தளித்த புயலிலிருந்து காப்பாற்றி, கடல் கொந்தளிப்பினால் புகார் நகரையே மூழ்கடித்த கடல் கோளிலிருந்து காப்பாற்றி, தன் குழந்தையைத் தன்னிடமே சேர்ப்பித்துவிட்ட இறைவன் கருணையை எண்ணி எண்ணி நெக்குருகினான் மன்னன்.

தொண்டைக் கொடிகளினால் மிதப்புண்டு கடல் அலைகளினால் கரைசேர்ந்த காரணத்தால் அவனுக்கு 'தொண்டைமான் இளந்திரையன்' என்று பெயரிட்டான் மன்னவன்

அவன்தான் தமிழக வரலாற்றிலே எடுத்துப் பேசப்படும் மன்னர் மன்னன் தொண்டைமான் இளந்திரையன் என்பது யாவரும் அறிந்ததே.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நெஞ்சார அவளென்னை நேசிக்க வேண்டும் - அந்த
நெஞ்சத்தின் மேல்கிடந்து நான்புரள வேண்டும்.
நெஞ்சத்தின் ஆசையெலாம் நிறைவேறவேண்டும் - தினம்
நினைவிலே நின்றவளே நடமாட வேண்டும்.
பஞ்சத்தில் தவித்துநான் துடிக்கின்றபோது - அவள்
பழவிதழைத் தந்தூட்டி பசிதீர்க்க வேண்டும்.
மஞ்சத்தில் களைத்துநான் துயில்கின்றவேளை - அவள்
மயிலாகி என்முன்னே நடமாட வேண்டும்!

குயில்போன்று இசைபாட வேண்டும் - அந்த
குளிர்கானம் கேட்டுநான் துயில்கொள்ள வேண்டும்.
நயிலாக அவள்மாற வேண்டும் - அந்த
நதியிலே நீந்திநான் விளையாட வேண்டும்.
முகிலாகி மழை பெய்ய வேண்டும் - அதில்
முற்றாக நான்நின்று நனைந்தாக வேண்டும்.
பயிராக அவள் வளர வேண்டும் - அந்த
பயிர்த்தோட்டம் சென்றுநான் பழமுண்ண வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையாகி அவள் திகழ வேண்டும் - மான்
கண்வீச்சில் நான்மயங்கிக் கவிபாட வேண்டும்.
சிலையாக அவள் மாற வேண்டும் - அந்தச்
சிலைமுன்னே நான்நின்று மலர்தூவ வேண்டும்.
விலைமதியா முத்தாக வேண்டும் - அதை
விலைகொடுத்து வாங்கிநான் வைத்தாக வேண்டும்.
மலைவீழ் அருவியாய் அவள்ஓட வேண்டும் - அந்த
மலையாற்றுக் குளிர்நீரில் தினம்மூழ்க வேண்டும்.

வானத்தில் எழுகின்ற நிலவாக வேண்டும் - அந்த
வண்ணஒளி ஊடேநான் உலாச்செல்ல வேண்டும்.
கானத்தில் பூக்கின்ற மலராக வேண்டும் - அதை
கரங்களிலே தாங்கிநான் மணந்தாக வேண்டும்.
நாணத்தை விட்டவள் உறவாட வேண்டும் - எந்
நாளுமே கவிபாடத் துணையாக வேண்டும்
மானத்தைக் காக்கின்ற துயிலாக வேண்டும் - என்
மனத்திலே பழுத்தவள் தேன்சிந்த வேண்டும்.

**அன்பு முகையதீன்.**



கவிஞர் அன்பு முகையதீன் 1961ம் ஆண்டுமுதல் எழுதி வருகிறார். ஈழத்துத் தினசரிகள் முதலியவற்றில் இவர் கவிதைகள் நிறைய இடம்பிடித்துள்ளன. பல கவியரங்குகளில் கலந்துகொண்டிருக்கிறார். சிறந்த மேடைப்பேச்சாளர். கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகள் பலவற்றில் பரிசு பெற்றிருக்கிறார்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியத்திலே திருக்குர்ஆன்

ஜே. எம். எம். அப்துல் காதிர்,

எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாகுத்தஆலா அருளிய திருமறையாம் திருக்குர்ஆன், தன் சொல்லணிச் சிறப்பாலும் பொருளணிப் பொலிவாலும் அறபு மொழிக்கு வாழ்வும் வளமும் ஊட்டியது. அவ்வாறே இவ்வுலகின் சிறந்த மொழிகள் பலவற்றுக்கும் அத்திருமறையின் கருத்துக்கள் பெரும்வளத்தை வழங்கியுள்ளன.

திருக்குர்ஆனின் ஈடும் இணையுமற்ற தெய்வீகக் கருத்துக் கருவூலங்களைத் தாங்கி மிளிரும் நனிபெருஞ் சிறப்பினை நம் தாய் மொழியாம் தமிழ் மொழியும் பெற்றுப் பொலிவுற்றுள்ளது. திருக்குர்ஆனின் அடிப்படையில் எழுந்துள்ள கருத்துக்களை விளக்கும் தமிழ் இலக்கிய வசன நூல்களும் செய்யுள் நூல்களும் மிகப்பலவாய்ச் சிறப்புற்று விளங்குகின்றன. அவை தமிழ்மொழிக்கே சிறந்த அணிகலன்களாகவும் நின்று நிலவுகின்றன.

திருக்குர்ஆனின் போதனைகளையும் திருநபியின் சாதனைகளையும் தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்து உய்யவேண்டும் என்னும் நன்னோக்கத்தால் உந்தப்பட்டே முஸ்லிம் பெரும் புலவர்கள் தங்கள் நூல்களை ஆக்கி அருளியுள்ளார்கள். அதனால் இஸ்லாத்துக்கு மட்டுமன்றித் தமிழ் இலக்கியத்துக்குமே அவர்கள் பெருஞ்சேவையாற்றிச் சிறப்படைந்துள்ளார்கள்.

இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் பெருஞ்சிறப்புக்குக் காரணம் அது தமிழ் இலக்கிய மரபின் உயர்தரத்தை எட்டிப் பிடித்துள்ளமை மட்டுமன்று, ஆயின் அது திருமறையின் கருத்துக்களை அடிப்படையாய்க் கொண்டிருப்பதும் அதன் தனிச் சிறப்புக்குக் காரணமாகும்.

திருக்குர்ஆன் வாக்கியங்களைச் சாதாரண வசன நடையில் வேறொரு மொழியில் பெயர்த்து எடுப்பதாயின் அது மிகவும் சிரமத்தைத் தரும் கருமமேயாகும். ஆங்கில மொழியில் திருக்குர்ஆனை மொழிபெயர்க்க வந்த ஆங்கிலேயரான முஹம்மது மார்மடியூக் பிக்தால் அவர்கள் கூடத் தம் நூலுக்கு 'மொழிபெயர்ப்பு' என்று பெயர் சூட்டுதற்கே அஞ்சினார். 'மகிமைக்குரிய குர்ஆனின் கருத்துக்கள்' என்றே அவர் பெயரிட்டார்.

அவ்வாறிருக்கும்போது திருமறையின் வாக்கியங்களைச் செய்யுள் உருவில், அதுவும் இலக்கண வரம்பு அமைந்த தமிழ்ச் செய்யுளில், நேர்மொழிபெயர்ப்பாக அமைத்தல் எவ்வளவு சிரமமும் அவதானமும் வேண்டிய முயற்சி என்பதை நாம் சிந்தித்தல் வேண்டும். திருக்குர்ஆனின் கருத்துக்களைத் தம் நூல்களில் முஸ்லிம் பெரும் புலவர்கள் விரித்துக் கூறுவதோடு, அத்திருமறையின் அமுதவாக்கியங்களையும்

**ஜே. எம். எம். அப்துல் காதிர்**

ஈழத்து இஸ்லாமிய இலக்கிய உலகை வளப்படுத்துவதில் பெரும் பங்கு கொண்டவர் ஜனாப். ஜே. எம். எம். அப்துல் காதிர். சமயசம்பந்தமான வானொலிப் பேச்சுகள், கட்டுரை முதலியவற்றை நிறைய ஆக்கியுள்ள இவர், சிறந்த பேச்சாளரும் ஆவார்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து ஆளுவதுண்டு. அவ்வாக்கியங்களை அவர்கள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் எடுத்து ஆண்டுள்ளனர்.

திருக்குர்ஆனின் திவ்விய வாக்கியங்களை முஸ்லிம் பெருங்கவிஞர்கள் எடுத்தாண்டு எங்ஙனம் தமிழ் இலக்கியத்துக்கு வளம் தந்துள்ளார்கள் என்பதனை ஒரு சில எடுத்துக்காட்டுக்களுடன் நாம் ஆராய்வோம்.

நபிகளாரின் வாழ்க்கை வரலாற்றினைத் தித்திக்கும் தேன்மாரியாய்த் தெள்ளு தமிழிற் பாடியருளியவர் உமறுப்புலவர். அவர் திருமறை வாக்கியங்களைக் கையாளும் போது மிகமிக அவதானமும், பக்தியும், பயமும், தயக்கமும் கொண்டவராய்க் காணப்படுகின்றார். அவ்வாக்கியங்களை அவர் நேரடியாக எடுத்துத் தமிழ் செய்ய மாட்டார். இன்ன வாக்கியங்கள் என்று குறிப்பிடுவார், அல்லது அவ்வாக்கியங்களின் சாரத்தைமட்டும் கூறுவார்.

நபிகள் பெருமானாருக்கு (ஸல்) நபிப் பட்டம் வந்த வரலாறு கூறப்போந்தார் உமறுப்புலவர். முதன்முதலாக ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் அல்லாஹ்வால் அருளப்பட்ட திருக்குர்ஆன் வாக்கியங்களை அவர் எடுத்துக் கூறும் முறையினைப் பாருங்கள்.

''மிக்குயர் மறையின் வள்ளல்
விளம்ப விண்ணவர்கள் கோமான்
'இக்றவு' எனும் 'சூறத்'தில்
இருந்து நாலாயத்(து) இன்பம்
மெய்க்குற 'மாலம் யௌலம்'
எனுமட்டும் விளம்பு வீரென்(று)
ஒக்கலில் உயிரின் மிக்காய்
உறுநபிக் குணர்த்தி னூரால்''

[—சீறு: நபிப்பட்டம் பெற்ற படலம். 27.] எனக்கூறுதலுடன் அவர் அமைந்து விட்டார்.

(விண்ணவர்கள் கோமான் — ஜிபுரீல் (அலை) இறைவனிடமிருந்து நபிமார்களுக்கு வேத வாக்கியங்களைக் கொண்டு வரும் வானவர். சூறத்து — திருக்குர்ஆனின் அத்தியாயம். இக்றவு-ஓர் அத்தியாயத்தின் தலைப்புச் சொல், அவ்வத்தியாயத்துக்குப் பெயராகக் கூறப்பட்டது. ஆயத்து — (திருக்குர்ஆன்) வாக்கியம். நாலாயத்து — நான்கு வாக்கியம். 'மாலம் யௌலம்' — நாலாம் ஆயத்தின் இறுதிச் சொல். 'இக்றஉ' என்னும் சொல் தொடக்கம் 'மாலம் யௌலம்' என்னும் சொல்வரையுமுள்ள நான்கு வாக்கியங்களையும் ஓதுமாறு தேவதூதர் கற்பித்தார்.)

இவ்விடத்தில், திருக்குர்ஆனிலுள்ள இன்ன ஆயத்துக்கள் என்று கூறினாரேயன்றி அவற்றின் பொருளைப் புலவர் கூறவில்லை.

'உத்துபா' என்பவர் குறைஷிகளின் பெருந்தலைவர். அவர் வாக்குவன்மை மிகுதியும் வாய்க்கப் பெற்றவர். நபிகளாருடன் (ஸல்) வாதிட்டு அவர்கள் கூறும் வேதநல் வசனங்களைக் கொண்டே அவற்றின் உபயோகமின்மையை நிறுவவும், அவர்களைத் தோற்கடிக்கவும் வருகின்றார். அவருக்கு நபிகளார் (ஸல்) வேதவாக்கியங்களை விரித்துரைக்கின்றார்கள். அவர்கள் கூறிய திருக்


## ஒரு 50 சதம்

ஒரு ஸ்லீப் டிக்கட்டின் விலை சதம் 50.
ஒரு சிகரட் பக்கட்டின் குறைந்த விலை ரூ. 1-00.
ஒரு இரண்டாம் வகுப்பு சினிமாவுக்கு ரூ. 1-25.

மேற்கண்ட செலவுகளுக்கு சர்வசாதாரணமாகப் பணத்தை வாரியிறைக்கும் அன்பர்களே! ஈழத்து இலக்கியத்துக்காக மாதம் 50 சதம் செலவிட உங்களால் முடியாதா?

நிச்சயமாக முடியும்.

இன்றே
''மலர்'' சந்தாதரர்களாகச்
சேருங்கள்.

தனிப்பிரதி சதம் -/50.
ஆண்டுச்சந்தா ரூ. 6-00.

விபரங்களுக்கு

''மலர்''
21, மத்திய வீதி,
மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குர்ஆன் வாக்கியங்கள் யாவை? அவற்றின் பொருள் என்ன? என்பவற்றைப் புலவர் எடுத்துக் கூறவில்லை. அவற்றினிடமாக,

''ஆதிதனை உளத்திருத்தி 'பிசுமில்'
எனும்
உரை திருத்தி அமுதம் ஊறும்
வேதமெனும் 'புறக்கா'னில்
ஒரு'சூறத்(து)'
எடுத்தோதி விரிவதாகப்
போதமுறும் உபநிடதப்
பொருளனைத்தும்
தொகுத்துரைத்தார் பொருவி
லாத
சீதரவொண் கவிகைநிழல் தனிலுலகம்
புரந்தளிக்கும் செல்வி யோரே''
[— உத்துபா வந்த படலம் 18.]

என்று கூறி அமைகின்றார் கவிஞர்.

(பிசுமில் — குர்ஆனை ஓத ஆரம்பிக்க முன் ஓதும் திருவாக்கியத்தின் சுருக்கப் பெயர். அருளாளனும் அன்புமிக்கோனு மாகிய அல்லா (உற்)வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன் என்பது அதன் பொருள். புறுக்கான் — திருமறையின் பெயர்.)

இவ்விடத்தில், முற்கூறிய எடுத்துக் காட்டிற் கண்டதுபோல இன்ன ஆயத்தை ஓதினார்கள் என்று சுட்டிக்காட்டவில்லை, அல்லது அதன் சாரத்தையாவது கூறவு மில்லை.

உமறு கத்தாபு (றலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இஸ்லாத்தின் வன்பகைவராய் விளங்கிவந்த அவர், ஈமான் கொள்ளுதற்குக் காரணமாய் அமைந்தது திருக்குர்ஆன் வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்த ஏடொன்றை அவர்கள் வாசிக்கக் கிடைத்த நிகழ்ச்சியாகும். அவ்வரலாறு கூறவந்த போது கூடக் கவிஞர் அந்தத் திருக்குர் ஆன் வாக்கியங்களின் விளக்கத்தைக் கூற வில்லை. இன்ன வாக்கியங்கள் தாம் என்று தெளிவாய்ச் சுட்டவுமில்லை. அவற்றின் பொதுவான சாரத்தை மட்டும் கூறினார்.

''சுந்தரப் புதுநீ ராடித்
தூசணிந் திகலி லாது
வந்தபின் னேனை நோக்கி
முகம்மதேயுண்மைத் தூதென்(று)
அந்தமி லாதி சொற்ற
'ஆயத்'தும் பொருளும் தீஞ்சொல்
சிந்துபத் திரத்தை ஈந்தார்
சிற்றிடைப் பெரிய கண்ணார்''
[உமறு காத்தாபு ஈமான்
கொண்ட படலம் 74.] (பின்னை—தம்பியாகிய உமறு (றலி). சிற்றிடைப் பெரிய கண்ணார் என்றது உமரின் சகோதரியை)

இச்செய்யுளில், 'அத்திருவசனங்கள் முகம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மைத் திருத்தூதராவர் என்னும் பொருளைத் தெளிவாய் உரைத்து விளக்கின' என்று குறிப்பிடுகின்றார்.

உமறுப் புலவர் அவர்கள், இவ்வாறு விரித்துக் கூறுது செல்வதற்குக் காரணங்கள் இருத்தல் வேண்டும் முந்நூறு ஆண்டுகளுக்கு முந்திய அவர்காலத்தில் திருக்குர் ஆனை மொழிபெயர்ப்பதற்கு எதிர்ப்புக்கள் இருந்திருக்கலாம். மொழி பெயர்க்குங்கால் அவற்றின் பொருளிற் பேதங்கள் தோன்றி அநர்த்தமாய் விடுமோ என்னும் அச்சமும் காரணமாகலாம். உமறுப் புலவரவர்கள் அறபு மொழியிற் போதிய தோர்ச்சியுரும் இருந்திருக்கலாம். எங்ஙனமாயினும், மூன்று நூற்றாண்டுகளின் முன்னர் இருந்த நிலையில் அவர் இதற்கும் மேலாகச் செய் திருத்தல் வேண்டுமென யாம் இப்போது எதிர்பார்த்தல் சாலாது.

இனி, திருக்குர்ஆன் வாக்கியங்களின் மொழிபெயர்ப்புக்கள் என்று கூறத்தக்க அளவுக்கு அவற்றின் கருத்துக்களைச் செய்யுள் உருவில் எடுத்தாண்டு தமிழிலக் கியத்துக்கு ஆக்கந் தந்துள்ளனர் பிற்காலப் புலவர் சிலர்.

உமறுப் புலவருக்கு ஒன்றரை நூற்றுண்டின் பின்னர் வாழ்ந்து 'புலவர் நாயகம்' எனப் புகழ்கொண்டவர் ஷெய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் அவர்கள் இவர் திருக்குர்ஆனை ஆராய்ந்து கற்ற 'ஆலிம்' ஆகவும் அதனை முழுவதும் மனப் பாடம் செய்த 'உறாபிஸு' ஆகவும் விளங்கினர். வடமொழி வல்ல மகா வித்துவானுகவும் அவர் புகழ் பூத்திருந்தார். அவர் இயற்றிய காப்பியங்களுள் திருக்குர்ஆன் வாக்கியங்களின் கருத்துக்கள் நேர்முகமாகவே எடுத்தாளப்படுகின்றன. அச்செய்யுள்கள் அவற்றின் மொழி பெயர்ப்புக்களாய் விளங்குகின்றன.

'புதூகுஷ்ஷாம்' என்பது புலவர் நாயகம் இயற்றிய ஒரு பெருங்காப்பியம். அதில் நபிகளாரின் (ஸல்) மதீனு வாழ்க்கையின் பிற்பகுதி 'முகம்மதியாய்க் காண்ட'மாக அமைந்துள்ளது. அக்காலை அவர்களுக்கு அருளப்பட்ட திருக்குர்ஆன் வாக்கியங்கள் பல இந்நூலில் அழகுற எடுத்தாளப்படுகின்றன

உரோமப் பேரரசின் மாமன்னனுகிய ஹிறக்கிலுக்கு நபிகளார் (ஸல்) நிருபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று அனுப்பினர். அந்நிருபத்தில், இறைவன் தங்களுக்கருளிய வேதநன்னெறியின் பால் விரைந்து வருமாறு அம்மன்னனை அழைத்திருந்தனர் நபிகளார் (ஸல்). அந்நிருபத்தின் இறுதியில் அழகிய திருமறை வாக்கியமொன்று பொறிக்கப் பெற்றிருந்தது. அவ்வாக்கியம் வருமாறு:-

"வேதத்தையுடைவர்காள், எங்களுக்கும் உங்களுக்கும் நேரியதாய் உள்ள ஒரு வார்த்தையின்பால் (ஒற்றுமைபூண) வாருங்கள். அஃதாவது: அல்லா (ஹ்) வைத் தவிர மற்றெவரையும் வணங்கோம். நாம் அவனுக்கு யாதொன்றையும் இணையாக்கோம். அல்லா (ஹ்) வை அன்றி நம்முள் எவரும் நம்முள் எவரையும் தெய்வமாகக் கொள்ளோம்.'

'இதனை நீங்கள் புறக்கணிப்பதாயின் நிச்சயமாக நாங்கள் (அவனுடைய ஏகத்துவத்தைப் பூரணமாய் ஏற்றுக் கொண்ட) முஸ்லிம்கள் தாம் என்று நீங்கள் (இறைவனின் சமுகத்தில்) சாட்சி கூறுவீர்களாக"

— திருக்குர்ஆன் 3: 64.

இத்திருமறை வாக்கியத்தைப் புலவர் நாயகமவர்கள் தெள்ளுதீஞ் சுவைத்தேன் தமிழ்ச் செய்யுள்களாய் வடித்தெடுத்துத் தருகின்றார். திருமறை வசனத்தின் பொருளும் கம்பீரமும் ஒரு சிறிதும் குன்றாமலும் ஐயமும் திரிபும் அணுகாமலும் அளவறிந்து சொற்களை ஆக்கிச் சொற் செட்டினோடு அவர் பாடியுள்ளார்.

"எமக்கு மக்குமொத் திருந்தசொல்
இடத்தினில் வாரீர்
சுமக்கு மாமறை யாளர்காள்
வேறொன்றைத் தொழுதல்
அமைக்க லாதினை வைக்கலா
தாண்டகை யென்ன
நமக்குள் நம்மிலே யாக்கலா
துறலீறை யன்றி"

"இன்ன மூன்றினை எடுத்திறை
மொழியியல் மாறித்
துன்னு வீரெனில் யாங்களவ்
வொருமையிற் றொடர்ந்த
சொன்ன யத்தின ரெனவறி
சோர்விலாச் சாட்சி
நன்ன லத்தினே டறைமினீர்
மேலைநாள் என்றும்"

[ஹிறக்கிலுக்கு நிருபம் விடுத்த படலம் 54, 55.]

(எமக்குமக்கும்: எமக்கும், உமக்கும். ஒருமை: இறைவன் ஒருவனே என்னும் ஏகத்துவக் கொள்கை.)

இச்செய்யுள்களை மூலவாக்கியத்தினோடு ஒப்பிட்டு நோக்குங்கால் இவற்றின் அருமைப்பாடு இனிது விளங்கும். நவில் தொறும் நவில் தொறும் இன்பம் பயக்கும்.

இனி, புலவர் நாயகத்துக்கு ஒன்றரை நூற்றாண்டின் பின்னர், இற்றை நாளில் நம்மிடையே வாழ்ந்து வரும் கவிமணி ஒருவர் திருக்குர்ஆன் கருத்துக்களைக் கையாளும் செம்மையினையும் ஒருசிறிது காண்போம்.

நபி மொழிகளை வசனமாகவும் செய்யுளாகவும் திறம்பட யாத்து வெளியிட்டு வருபவர் மதுரைவாழ் மகாவித்துவான் காதிறு முஹ்யித்தீன் மரைக்காயர் அவர்கள். அன்னார் தமது சிறிய பிரபந்தம் ஒன்றில் ஓர் இளைஞனின் மனப்போராட்டத்தினை விவரிக்கின்றார். அவன், இறைவனுணைக்கு அடிபணிய வேண்டிய கடமையுணர்ச்சிக்கும் குடும்பப் பாசத்திற்குமிடையே அகப்பட்டுத் தத்தளிக்கின்றான். இருதலை கொள்ளி எறும்பாய் இன்னலுற்ற அவனுக்குத் திருமறை வாக்கியமொன்று நினைவுக்கு வருகின்றது. அக்கணமே தன் மனைவி மக்களையும், அன்னை தந்தையரையும், உற்றார் உறவினரையும், தான் தேடிவைத்திருந்த திரவியங்களனைத்தையும் துச்சமெனத் துறந்து தன் ஆருயிரைத் தியாகஞ் செய்ய ஓடிச் செல்கின்றான். அவன் நினைவுக்கு வந்த திருவாக்கியம் வருமாறு:-

"உங்கள் தந்தைமார்களும், உங்கள் புதல்வர்களும், உங்கள் உடன்பிறந்தவர்களும், உங்கள் சுற்றத்தவர்களும், நீங்கள் தேடி வைத்துள்ள திரவியங்களும், நஷ்டமாகி விடுமோ என்று நீங்கள் அஞ்சுகின்ற வர்த்தகமும், நீங்கள் உவக்கும் உறை விடங்களும் அல்லா (ஹ்) வையும், அவன் திருத்தூதரையும், அவனது பாதையில் தியாகம் புரிவதையும் விட உங்களுக்கு அதிக விருப்ப மானவையா யிருப்பின் (நீங்கள் உண்மை விசுவாசிகள் அல்லர்)

— திருக்குர்ஆன் 9: 24:

இத்திருமறை வாக்கியத்தின் பொருளைக் கவிஞர் காதிறு முஹியித்தீன் மரைக்காயர் கவினொழுக யாத்துள்ள கவிதைச் சித்திரத்தைப் பாருங்கள்:

"நுந்தைமறை மக்களுடன் பிறந்தார்
சுற்றம்
நுந்தேட்டாற் பெறு பொருளும்
மிச்ச மின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தமுறின் என்செய்வோம்
என்று நீவிர்
வருந்துகின்ற வாணிபமும்
விரும்பும் இல்லும்
அந்தமிலான் அவன்தூதர்
அவன்றன் சேவை
ஆசையினை மிகைக்கவிடல் ஆகா
தென்னும்
நந்தவிலா மறைமொழியோர்ந்(து)
உற்றார் பின்னே
நடந்தலற ஒட்டகையூர்ந்
தோடி ஞனே"

— முந்தை முஸ்லிம் முன்மாதிரி:
இஸ்லாமிய வழக்கு மன்றம் 36.

இவ்வினிய செய்யுளில், மிகஇலகுவான தெள்ளிய ஆற்றொழுக்குப் போன்ற அழகிய நடையில் திருமறைப் பொருளைத் தெளிவாய் விளக்கியுள்ளார் கவிஞர். வேண்டிய அளவுக்குச் சொற்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். தம் சொந்தச் 'சரக்கு' களை அவர் செய்யுளில் நுழைக்க முற்படவில்லை. இறைவன் திருமொழியை எடுத்துரைக்கின்றோம் என்னும் அரிய பக்திப் பரவசத்துடன் அவர் அளவுடன் கூறி அமையுந்திறம் மிகுதியும் நலம் பயப்பதாய் அமைந்துள்ளது; நமக்கும் பக்திப் பரவசத்தினை ஊட்டுகின்றது. இத்துறையில் ஈடுபட்டுச் செய்யுள் செய்ய விழைவாருக்கெல்லாம் சிறந்த முன்மாதிரியாய் விளங்குகின்றது.

இவ்வாறு இஸ்லாமியப் பெருங்கவிஞர்கள், இன்னுயிரினும் மேலாய்ப் போற்றும் இனிய வேதவாக்கிய சாரங்களை இனிமை மீதூருஞ் செய்யுள்களாய் வடித்தெடுத்துத் தந்து தமிழ் மொழிக்கு அமிழ்தனைய புது வளமொன்றை ஊட்டியுள்ளனர். ஊட்டி வருகின்றனர். தமிழிலக்கியப் பூஞ்சோலையில் என்றும் நின்று நறுமணம் பிலிற்றும் வாடா நன்மலர்களாய் அவை மலர்ந்து பரிமளிக்கின்றன. அந்த மணியனைய மறை வசனங்கள் தமிழணங்கின் தலைமிசைச் சூடிய மணிமகுடத்திற் சுடர் விட்டிலங்கும் மதிப்பிடற்கரிய மாணிக்கராசிகளாய் என்ஞான்றும் மிளிர்ந்தொளிரும் என்பதில் ஐயமில்லை.

★

## "மலர்" வாசகர்கள் மாதாந்தம் பரிசுபெற ஒரு வாய்ப்பு

—★—

இம்மாத 'மலர்' சஞ்சிகையில் இடம்பெற்றுள்ள கதை, கட்டுரை, கவிதை ஆகியவற்றைப் படித்துவிட்டீர்களா? அப்படியானல் உங்களுக்கு ஒரு சிறு வேலை தர விரும்புகிறோம். இவற்றுள் சிறந்த படைப்பு எது என்று நீங்கள் கருதுகிறீர்களோ அதையிட்டு ஒரு விமர்சனம் எழுதுங்கள். உங்கள் கட்டுரை 'மலர்' சஞ்சிகையின் இரண்டு பக்கத்திற்கு மேற்படக்கூடாது. (பூள்ஸ்காப் தாளில் 4 பக்கம்) நீங்கள் விமர்சனத்துக் கெடுத்துக்கொள்ளும் விடயம், சிறுகதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ இருக்கலாம். (இனிவரும் இதழ்களில் நாடகமும் இடம்பெறும்.) உங்கள் கட்டுரை இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் எங்களுக்குக் கிடைக்கவேண்டும். தெரிவு செய்யப்படும் சிறந்த கட்டுரைக்குப் பரிசு ரூபா 25/- வழங்கப்படும்.

இப்போட்டி ஒவ்வொரு மாதமும் இடம்பெறும். கட்டுரைகள் பிரதிமாதமும் 15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்க வேண்டும்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகங்கள் பாரமா?

**அருள். சுப்பிரமணியம்**

அதிகாலை எட்டு மணிக்குப் படுக்கையைவிட்டு எழுந்தேன். என்னைப் பொறுத்தவரையில் எட்டு மணிதான் அதிகாலை.

வழக்கம்போல முகங் கழுவாமல் ஒரு கிளாஸ் தண்ணீரை வாயின் வழியாக வயிற்றில் விட்டுக்கொண்டு அதனால் ஏற்பட்ட சுறுசுறுப்புடன், மலசலகூடத்தையடைந்து கருமத்தை முடித்தபின்னர் மயிரில்லாத மண்டையைப்போல் சொட்டையாகக் காட்சியளித்து தனக்கு வயதாகிவிட்டதையுணர்த்திக் கொண்டிருக்கும் பல் தீட்டும் பிரஷைக் கைப்பற்றி அதில் செங்கல் தூளெல்லாம் தோற்றுப் போகும் தரத்தையும், நிறத்தையும் ஒருங்கேயமையப்பெற்ற "கீபால்" பற்பொடியை சிறிது தூவி கொடுப்பிற்குள் மடக்கிக் கடித்துக்கொண்டு 'சுவிம்மிங்பூல்' எல்லாம் எனக்குமுன் எம்மாத்திரம் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கும் குளியலறையை அடைந்து நீர்த் தடாகத்தில் நீச்சலடித்து, வெய்யிலில் காந்து கருவாடாய்ப் போய்க் கொடியில் தொங்கிக் கொண்டிருந்த துவாயால் உடலைத் துடைத்து ... ... அப்பாடி, ஒருவாறு வழக்கமான காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினேன். (பதினைத்து ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டு குடியிருக்கும் அறையைத் தான் கூறுகிறேன்.)

கடந்த இரண்டு மாத காலமாக என் மானத்தைக் காப்பாற்றிக் கொண்டு, அழுக்கினால் பாரங் கூடிக் கனத்துக் கொண்டிருக்கும் குறுலோன் காற்சட்டைக்குள் அவசர அவசரமாகப் புகுந்து கொள்கிறேன். மணி எட்டரை.

இன்றைக்காவது சிறிது நேரத்தோடு ஆபீசுக்குப் போவோம் என்று எண்ணிய நான் எனது 'வாட்டர் புறூப்' துவிசக்கர வண்டியை எடுத்துக்கொண்டு அலுவலகத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தேன்.

ஏனோ தெரியவில்லை, வண்டி முன்னேறிக் கொண்டிருந்தாலும் மனம் மட்டும் என் வாழ்க்கையின் பசுமையான பழைய நினைவுகளை நோக்கிப் பின்னேறிக் கொண்டிருந்தது.

அன்பும் பண்பும் அமையப் பெற்றவர் என் தந்தையார். தன்னால் இயன்றதைச்



ஈழத்தின் புதிய இலக்கியப் பரம்பரையில் 'புதிய' பார்வையுடைய ஒரு புதிய எழுத்தாளர் அருள். சுப்பிரமணியம். இது அவரது முதற்கதை. விமர்சனக் கண்ணோட்டத்துடன் சிறுகதைகளைப் படிக்கும் இரசிகராகவே அவர் இதுவரை இருந்திருக்கிறார். இனி மேல்தான் அவரது சாதனைகள் தெரியவேண்டும்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரித்து அம்மாவின் கையில் கொடுத்து விட்டு ஒருநாள் கண்ணை மூடி விட்டார்.

கைம்பெண்ணான என் தாய் கஷ்டப்பட்டாள் எம்மை வளர்க்க. அவளுக்கு ஆசைக்கொரு பெண், எனது அக்கா. ஆஸ்திக்கொரு ஆண், அதாவது நான்.

அக்கா அழகானவள் அவளுடைய அழகு உங்கள் வீட்டு அழகு பக்கத்து வீட்டு அழகு போன்றதல்ல. அது தனியழகு. பின் கேட்கவா வேண்டும். கிடுகிடுவென்று அழகாக வளர்ந்தாள். குடும்ப கஷ்டமே இன்னதென்று தெரியாமல் வளர்ந்தாள். அழகாகக் காதலும் பண்ணக் கற்றுக் கொண்டாள். நான் அந்நேரத்தில் மிகவும் பிசியாகத் திரிந்ததால் அக்காவின் காதலைப் பற்றி அம்மா சொல்லக் கேள்விப் பட்டதோடு சரி. என் கவனமெல்லாம் பட்டம் விட்டுக்கொண்டிருந்த பையன்களின் வாயைப் பார்ப்பதிலேயே செலவழிந்து கொண்டுருந்தது.

அருமைத் தாயாரின் கவனமெல்லாம் என்னிலும் என் கவனமெல்லாம் பட்டங்கள் விடும் பையன்களிலும் சென்று கொண்டிருக்க, அக்காவின் கவனம் மட்டும் சிறிது வித்தியாசமாக பக்கத்து வீட்டு கந்தையாவின் மகன் ராஜனின் மேல் சென்று கொண்டிருந்தது. இந்தக் காதல் விவகாரம் கள்ளத்தனமான பதிவுத் திருமணத்தில் முடிந்த பின்னர்தான் எனக்கும் அம்மாவுக்கும் தெரிய வந்தது. எல்லாத் தாய்மாரையும் போல எனது அம்மா துள்ளிக் குதிக்கவில்லை. ஏனென்றால் அம்மாவிற்கு அப்பொழுது காலில் ஒரு புண்.

இனி என்ன செய்வது. கல்யாணந்தான் முடிந்து விட்டதே. என்ன இருந்தாலும் பையன் நல்ல பையன். கையில் சிறிது பசையும் உள்ள பையன். கெட்ட சகவாசம் இல்லாத பையன். ஆகவே அக்காவின் வாழ்க்கை சீராக இருக்கும் என்ற நம்பிக்கையில் அம்மா வாளாவிருந்துவிட்டாள். நானும் வாளாவிருந்ததில் வியப்பில்லை நான்தான் பட்டம் விட்ட பயல்களின் வாயைப் பார்த்துக் கொண்டு இருந்தேனே.

அக்காவின் குடும்பத்தேர் மெதுவாக் ஆனால் ஸ்திரமாக அழகாக அசைந்து அசைந்து நகர்ந்து கொண்டிருந்தது. வருடங்கள் செல்லச் செல்ல குட்டித் தேர்கள் ஒவ்வொன்றாக தோன்ற ஆரம்பித்தன. எல்லாக் குட்டித் தேர்களும் பெட்டைத் தேர்கள்தான். இருந்தாலும் அக்காவின் குடும்பம் எங்களூர் முத்துக்குமாரசுவாமி கோவில் தேருக்கு ஒப்பாக பீறு நடை போட்டு நகர்ந்து கொண்டிருந்தது.

எட்டு வருடங்கள் மறைந்தன. நான் இன்னமும் பட்டங்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் எப்படி? அம்மா வசை மாரி பொழிந்த வண்ணமே இருந்தாள். பாவம் அம்மா,... ஒரே கத்திக் கொண்டிருக்கிறாளேயென் பதற்காக சிறிது படித்தேன். எதைப் பற்றிப் படித்தேன். பரீட்சையில் எப்படி காப்பி அடிப்பது என்பதைப் பற்றிப் படித்தேன். பலன் ... ... பரீட்சையில் வெற்றி.

பின்னரும் ஒரு ஆறு மாத காலம் உருண்டோடியது.

உருண்டோடிய காலச் சக்கரம் அரசாங்க எழுதுவினைஞர் பதவியை என் தலையில் கட்டிவிட்டு அந்தகாரத்திலே மறைந்து விட்டது.

துன்பமே இன்னதென்று தெரியாத நான், பிரிவே இன்னதென்று அறியாத நான் அம்மாவையும் அக்காவின் தேர்க் குடும்பத்தையும் விட்டுப் பிரிந்து கொழும்புக்கு வந்தேன். பிரிவு என் மனதை வாட்டிற்று. ஆனாலும் என் மனதிலே பலத்த நிம்மதி. அக்கா நல்லாயிருக்கிறாள். அம்மா சுகமாயிருக்கிறாள். அது போதும் ... ... ...

காரியாலயத்தை நெருங்கிவந்து கொண்டிருந்தேன். பின்னோக்கிச் சென்று கொண்டிருந்த மனோரதம் ஒருவாறு மீண்டும் முன்னேறி சமநிலையை யடைந்தது.


நீங்கள் படித்தீர்களா?

கவிஞர்

திமிலைத்துமிலனின்

கற்கண்டுக் கவிதை நூல்கள்

**நீரரமகளிர்**

விலை சதம் 50.

**தொய்யாக்கனிகள்**

விலை ரூ. 2-00.

**கிடைக்குமிடம்:**

**ராஜம் பிரசுரம்**

திமிலைதீவு,

மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் கொஞ்சம் சந்தோஷமாயிருந்த நேரத்தில் என்னைப் படைத்து விட்டார் என்று நினைக்கிறேன். எனக்குத் தான் என்ன குறை வைத்திருக்கிறார். பையிலே நிறையப் பணமில்லாவிட்டாலும் சந்தோஷம் நிறைந்த அமைதியான வாழ்க்கை என்னுடையது. உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் என் போன்ற இளைஞர்களில் பூரண சந்தோஷத்துடன் வாழ்ந்து கொண்டிருப்பவன் நான் என்ற இறுமாப்பு என்னையறியாமல் என்னிடம் குடிகொண்டிருந்தது.

இனியென்ன, விரைவில் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு சந்தோஷமாக இருக்க வேண்டியதுதான்.

துவிச்சக்கரவண்டி வழக்கமாகத் தூங்கி வழியும் இடத்தில் ஒண்டிக் கொண்டது. அலுவலகத்தின் மாடிப்படிகளை காலுக்கு நான்கு படிகளாக தாவிய நான் சிறிது விரைவாக என் மேசைக்குச் சென்று இருக்கையில் அமர்ந்து கொண்டேன். இதற்கிடையில் அலுவலகங்களில் சாதாரணமாக நிகழும் காலை நேரப் பல்லிளிப்புக்கள், நமட்டுச் சிரிப்புக்கள் எல்லாம் இடம் பெற்றன. நேற்று ஒருவருக்கும் தெரியாமல் மேசைக்கடியில் மறைத்து வைத்துச் சாப்பிட்ட கச்சான் கொட்டைகளின் தோல்கள் கால்களுக்கடியில் இறைந்து காணப்பட்டன. அவைகளை மெதுவாக காலால் தட்டிக் கூட்டி விட்டேன். எங்களது பகுதிப் பியோனின் வரவுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தேன்.

'டைப்ரைட்டர்களின்' சத்தம் அங்கொன்றும் இங்கொன்றுமாக கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு 'பைலை' கையிலெடுத்து அதில் அடுக்கடுக்காக கட்டப்பட்டிருந்த தாள்களை தடவிக் கொண்டேன். இடையிடையே பியோன் கடிதம் கொண்டு வருகிறானா என்பதைக் கவனிக்கிறேன். திரும்பவும் தாள்களைத் தடவிக் கொள்கிறேன்.

கடந்த மூன்று மாதகாலமாக ஏனோ தெரியவில்லை வீட்டிலிருந்து ஒருவித கடிதமும் வரவில்லை ஏன் கடிதம் எழுதவில்லை என்று அம்மா, அக்கா, அத்தான், பிள்ளைகள் எல்லோரையும் திட்டிக் கடிதம் போட்ட நான், அதற்குப் பதிலாக ஒரு கடிதம் இன்றைக்காவது வரும் என்ற நம்பிக்கையில்தான் பியோனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

''இந்தாங்க உங்களுக்கு ஒரு கடிதம்'', மேசையின் நடுவே அமைந்திருந்த விளிம்பினுள்ளே கடதத்தைத் திணித்து விட்டு போய்க் கொண்டிருந்தான் அலுவலக வேலையாள். சந்திரனில் போய் இறங்கி விட்ட மகிழ்ச்சியுடன் கடிதத்தைப் பெற்றுக்கொண்டேன். 'பைல்' திரும்பவும் லாச்சிக்குள் ஒளிந்து கொண்டது. ''கடிதம் கொஞ்சம் கனமாக இருக்கும் போல'' இப்படி நினைத்துக் கொண்டே பராச்சென்று மேல்பகுதியை கிழித்து இரு விரல்களை உள்ளேவிட்டு கடிதத்தைக் கைப்பற்றிக் கொண்டேன். அக்காதான் எழுதியிருந்தாள். எவ்வளவு நாளைக்குப்பிறகு எழுதியிருகிறாள்.

அன்புள்ள தம்பி,

உன்னுடைய கோபமான கடிதம் கிடைத்தது. நீ எங்கே வீணாக யோசித்துக் கொண்டிருப்பாயே என்பதற்காகவும், பல நாட்களாக உன்னிடமிருந்து மறைத்து விட்ட ஒரு முக்கிய விஷயத்தை எப்படியாவது அறிவிக்கவேண்டுமே யென்பதற்காகவும் தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

தம்பி, அத்தான் இப்ப முந்தி மாதிரி இல்லை. ஒரே குடி. காலை வெள்ளணையிலே குடிக்க ஆரம்பித்து விடுவார். எப்படிப் பழகினார் என்று எனக்குத் தெரியவில்லை. பகல் முழுக்க பிள்ளைகளுடன் சமாளித்து விடுகிறேன். இரவு வந்தால் எனக்கு பயமும் கூட வந்து விடுகுது. ஒவ்வொரு நாளும் நன்றாகக் குடித்துவிட்டு நடுச்சாமத்தில் வந்து என்னையெழுப்பி அடித்துத் துன்புறுத்துகிறார். பிள்ளைகளும் இந்தக் கலவரங்களினால் நன்றாக நித்திரை செய்வதில்லை. சரியா ஒரு மாதத்திற்கு முந்தியிருக்கும். ஒருநாள் இப்படித்தான் குடிச்சுப்போட்டு வந்திருந்தார். சாப்பாட்டை அவருக்கு அருகில் கொண்டு போய் வைத்துவிட்டு கை கழுவத் தண்ணீர் எடுக்கப் போகத் திரும்பிக்கொண்டிருந்தேன். ஏதோ சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்ப்பதற்குள் அவர் எறிந்த சாப்பாட்டுக் கோப்பை என்ர நெற்றியை உடைத்து விட்டது. ''ஏண்டி சனியனே, புருஷன் சாப்பிட வந்தா முதலில தண்ணீர் கொடுக்கிறதா? இல்லகட்டி சாப்பிட குடுக்கிறதா? உன்னை என்ன செய்யிறன் பார் ... என்று பலவித அநியாயமான வார்த்தைகளால் என்னைத் திட்டி பக்கத்திலிருந்த கொள்ளிக்கட்டையால் என் தலையிலும் காலிலும் செம்மையாக அடித்தார். எனக்குப் பிரக்ஞை இழந்துவிட்டது. இந்தக் கலவரத்தில் கண் விழித்த அம்மா மூத்தவள் விஜயாவையும் கூட்டிக்கொண்டு அத்தானுடைய தகப்பனார் வீட்டை போய் விஷயத்தைச் சொல்லியிருக்கிறா. அதற்கு அவர் - இவ ஒண்டும் செய்யாட்டா அவன் ஏன் அடிக்கப்போறான். இவதான் ஏதோ செய்திருக்க வேணும், எனக்கு ஒண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாது, நீங்க போங்க எண்டு அம்மாவையும் திட்டி அனுப்பிவிட்டார். இதுக்குப் பிறகு பக்கத்து வீட்டில இருந்து ஆரோ போய் பொலிசில என்றி போட்டிருக்காங்க போல இருக்கு. போலீஸ் வந்து என்னை ஆஸ்பத்திரியில கொண்டு போய் விட்டுட்டு அத்தானை ஸ்டேஷனுக்கு கூட்டிக் கொண்டு போனார்கள். நாலு நாளைக்குப் பிறகு வீட்டுக்கு வந்த அம்மா துரும்பா இளைச்சுப் போயிட்டா. சின்னவள் ராதை சரியான பிரளி.

வீட்ட வந்த பிறகு தான் தெரியும் அத்தானுக்கு சரியான வாணிங் பொலீஸ் ஸ்டேஷனில் வைத்துக் கொடுத்தார்களெண்டு. நான் வீட்ட வந்து சேர்ந்த பிறகு அத்தான் இரண்டு மூண்டு நாள் குடிக்கவில்லை. வீட்டில பிள்ளையள் எல்லாத்துக்கும் குளிக்கவாத்து, சாப்பிட வைத்து, பள்ளிக்கு அனுப்பி விட்டு வீட்டு வேலை எல்லாத்தையும் தானே நிண்டு செய்தார். என்னாலையெண்டா ஒண்டும் செய்ய முடியல்லை. ''அத்தான் இனித் திருந்தி விடுவார், ஏதோ கெட்ட காலத்திற்கு அப்படி நடந்து விட்டது'' எண்டு அம்மா சொன்னாள். அனால் அதுதான் இல்லை.

நாலாம்நாள் குடிச்சுப்போட்டு வந்து பாயைவிட்டு எழும்ப முடியாமலிருந்த என்னை கையாலும் காலாலும் நல்லா அடிச்சுப் போட்டு வெளியே போயிற்றார். பிறகும் ஆரோ போய் போலீசில என்றி போட்டிருக்கிறாங்கள். பொலீஸ் வந்து எல்லாத்தையும் அம்மாட்டைக் கேட்டது. அம்மா ''ஐயோ, என்ர பிள்ளையைக் கொல்லப் போறானே, எனக்கு ஒருவருமில்லையே'' எண்டு பலவாறாகச் சத்தம் போட்டு போலீசிடம் முறையிட்டா.

இதுக்குப் பிறகு இரண்டு நாள் கொஞ்சம் நிம்மதி. அதுக்குள்ள இவள் பிள்ளை கோமதிக்கு நெருப்புக் காச்சலாக்கி ஆஸ்பத்திரியில கொண்டுபோய் அம்மா வைச்சிருந்தா. என்னாலையெண்டா அங்கால இங்கால அசையக் கூட முடியேல்லை ... ... ... இப்படி இந்த மாதத்துக்குள்ள எத்தனையோ தரம் நடந்து விட்டது.

ஒருவருடைய துன்பமும் இல்லாமல் சந்தோஷமா வாழ வேண்டியவன் நீ. பிஞ்சு உள்ளத்தை என் சோகக் கதையைச் சொல்லி நோகவைக்க விருப்பமில்லாத காரணத்தால தான் இவ்வளவு நாளும் இதைப் பற்றி உனக்கு எழுதவில்லை.

ஆனால் இன்று — என் குழந்தைகளை அவர் நல்ல முறையில பார்ப்பார் எண்டு இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் போய் விட்டது அந்த அளவிற்கு இரவு பகலெண்டில்லாம குடிச்சுப் போட்டு வீட்டில வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவோடையும் என்னுடையும் சண்டை பிடிச்சு பிள்ளையளையும் போட்டு ஒரே அடிச்சு – எங்கட வீடே ஒரே சவக் காடாய்ப் போய்விட்டது. தம்பி ... நானோ அம்மாவோ, பிள்ளைகளோ அறிஞ்சு அவருக்கு எந்தவிதமான தவறும் செய்யவில்லை. ஆனால் அத்தான் என்னத்துக்கு இப்படிச் செய்கிறாரோ தெரியவில்லை. அக்கம் பக்கம் முழிக்கக்கூட வெக்கமாயிருக்கு. தெய்வானை ஆச்சி தான் அடிக்கடி வீட்ட வந்து ஆறுதல் சொல்லிப்போட்டுப் போறவ.

தம்பி, இப்ப நான் துக்கப்படுறதெல்லாம் எனக்காக இல்லை. என்ர ஏழு குழந்தைகளைப் பற்றித்தான் எனக்கு கவலை. இதுகளிட கஷ்ட காலம் என்ர வயித்தில வந்து ஏழும் பெட்டையளாப் பிறந்து போச்சு. அத்தான் போகிற போக்கைப் பார்த்தா நான் இன்னும் கெநஞ்ச நாளைக் குத்தான் இருப்பன் போல இருக்கி.

ஆக, இப்ப எனக்கு இருக்கிறதெல்லாம் நீதான். உன்னால தான் என் குழந்தைகளை நல்ல வழியில் வளர்த்து ஒருவன்ர கையில பிடிச்சுக் குடுக்க முடியும். இந்தக் கடிதம் கண்ட உடனே ஒருக்கா ஊருக்கு வந்திட்டுப் போ. நீ சின்னப் பிள்ளையென்டாலும் அத்தானோட நல்ல விதமாப் பேசி—என்னைக் காப்பாற்ற வேண்டாம், என்ர பிள்ளைகளைக் காப்பாற்று.

இப்படிக்கு
அன்புள்ள அக்கா
**அருள்மணி.**

வாயடைத்து, கையொடுங்கி, சமைந்து இருந்தேன். ஐயோ, இவ்வளவும் ஒரு கனவாக, ஒரு பொய்யாக இருக்கக் கூடாதா? என்னையறியாமல் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் கொட்டியது. நண்பர்களுக்குத் தெரிந்துவிடப் போகிறதே யென்று துண்டினால் கண்களை மறைத்துக் கொண்டேன்.

கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போன்ற ஒரு நிலை.

சிறிது நேரத்திற்கு முன்னர் என்னை விட சந்தோஷமானவன் ஒருவன் இருக்க முடியாது என்று இறுமாந்திருந்தேனே. இப்போது என்னை விடத் துன்பம் நிறைந்தவன் உலகத்தில் இருக்க முடியாதே.

ஆறு நாட்கள் லீவு போட்டுவிட்டு உடனேயே என் இருப்பிடத்திற்குத் திரும்பினேன். என்னைச் சுற்றிலும் நிறைந்திருந்த சூனியத்தை உற்று நோக்க திராணியில்லாமல் முகத்தை கவிழப்போட்டுக்கொண்டு


## "மலர்"

**சந்தா விபரம்**

தனிப்பிரதி சதம் -/50.
ஆண்டுச்சந்தா ரூ. 6-00.

**விளம்பர விகிதம்**

| | | |
|---|---|---|
| முழுப் பக்கம் | — | ரூ. 125/- |
| உட்புற அட்டை | — | ரூ. 150/- |
| பின்புற அட்டை | — | ரூ. 200/- |

விபரங்களுக்கு
'மலர்'
21, மத்திய வீதி, மட்டக்களப்பு.


எதை யோசிக்கிறேன் என்று தெரியாமல் எதையோ யோசித்துக் கொண்டிருந்தேன்.

அன்றிரவே மெயில் வண்டியில் வீடு போய்ச் சேர்ந்தேன். குழந்தைகள் இன்னும் நித்திரையிலிருந்து எழுந்திருக்கவில்லை. அம்மா விறாந்தைக் கட்டிலிருந்து சுங்கான் பிடித்துக் கொண்டு இருந்தாள். சில நாட்களாகத்தான் மேற்படி பழக்கத்தைப் பழகியிருந்தாள். வளவு முழுவதும் மேலோட்டமாக ஒரு கண்ணோட்டத்தை வளையவிட்டேன். முற்றம் எல்லாம் பெருக்கப்பட்டு எதிர்பார்த்ததிற்கு மாறாகவே சுத்தமாக இருந்தது. அம்மா தான் முற்றம் எல்லாம் பெருக்கியிருக்கிறாள். பழைய கட்டை அல்லவா? இந்த வயதிலும் அவளுக்கு அலுப்பே ஏற்படுவதில்லை. அப்படி ஏற்பட்டாலும் ஒரு சுங்கானைப் புகைத்து அதைப் போக்கி விடுகிறாள்.

நான் வைத்துவிட்டு வந்த கப்பல் வாழை பல்கிப் பெருகியிருந்தது. வாய்க்காலிலிருந்து ஓடிக்கொண்டருந்த சவர்க்காரத் தண்ணீர் அப்பொழுதுதான் யாரோ குளித்து விட்டுப் போயிருக்கிறார்கள் என்பதைக் காட்டிற்று. கிணற்றுக் கட்டிலிருந்து துவாயால் உடலைத் துடைத்துக் கொண்டே வந்து கொண்டிருந்த அத்தான் சடுதியாக என்னைக் கண்டதும் குறுக்கறுத்து பக்கவாசல் வழியாக வீட்டிற்குள் புகுந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலைக் கழுவத் தெரிந்த இவருக்கு உள்ளத்தைக் கழுவத் தெரியவில்லையே...... இருக்கட்டும் பார்ப்பம்.

அம்மாவைக் கூப்பிட்டு அவளின் கவனத்தை என் பக்கம் திருப்புவதற்குக் கூட எனக்கு முடியாமலிருந்தது. அவர்களை இவ்வளவு நாளும் தனியே விட்டுப் போய் நான் மட்டும் சந்தோஷமாக இருந்து விட்டேன் என்ற குற்ற உணர்ச்சி என்னுள்ளே விரவிக் கிடந்தது.

சுங்கான் கறலைத் துப்புவதற்காக முற்றத்தின் பக்கம் திரும்பியவள் என்னைக் கண்டுவிட்டாள். ஓலம் வைக்கப் போகிறுளோ என்று பயந்தது தேவைற்றதாகி விட்டது. மௌனம் ... ... மௌனம் ... ... கண்களில் தாரை தாரையாக ஓடும் கண்ணீருடன் மௌனம். அப்பப்பா, இந்த மௌனம் என் நெஞ்சைச் சுட்டு எரிக்கின்றதே. அம்மா ஏதாவது சத்தம் போட்டு அழுதால் தான் என் இதயத்தைச் சுட்டு எரிக்கும் நெருப்பு அணையும் போலிருந்தது. ''அம்மா அழாதையம்மா, நான்தான் வந்திட்டனே, இனி ஒண்டுக்கும் யோசிக்காதை, இஞ்சார் அம்மா அழாதையணை, அழாதை''. என் கண்களிலும் கண்ணீர்ப் பொட்டுக்கள் மலர்ந்தன.

அட ... இவ்வளவுதாஞ நான்? நானே அழுதால் என் குடும்பத்தின் சீரழிவைப் போக்குவதுதான் யார்? சரி, இதிலெல்லாம் காலம் கடத்திப் பயனில்லை. இப்பவே அத்தானிடம் கதைத்துவிட வேண்டியதுதான். அறைக்குள் செருமல் சத்தம் கேட்கிறதே, ஓகோ, வெளியே செல்லத் தயாராவதின் சிக்னல் போலும்.

நெஞ்சத்தின் அடித்தளத்திலே புகைந்து கொண்டிருந்த துயரத்தின் குமைச்சல் எனக்கு அவரிடமிருந்த இயல்பான மரியாதையை குறைக்கத் தான் செய்தது. ''என்ர அக்காவிற்கு நான் ஒருவன் இருக்கிறேன்'', என்று சத்தம் போட்டுச் சொல்ல வேண்டும் போல் என் வாய் துடித்தது. ஆத்திரத்துடன் அறைக்குள்ளே கால்களை எட்டிப் பலமான சத்தத்துடன் வைத்தேன். ''என்ன இப்பதான் வாறியே? என்ன விசேஷம்''. அத்தான் கேட்டார். ''எல்லாம் உங்கட விசேஷம் தான்''. பதிலிறுத்தேன்.

பவுடர் போட்டுக் கொள்ளும் சாக்கில் முகத்தை மூடிக்கொள்கிறுர்!

'உங்களைத்தான், நீங்க செய்யிறது உங்களுக்கே நல்லாயிருக்கா? நானென்டா கனவில கூட நினைக்கேல்லை, நீங்கள் இப்படிச் செய்வீங்களெண்டு. அப்படி அவ என்ன உங்களுக்குச் செய்து போட்டாவெண்டு இப்படி அடிச்சுக் கொல்றீங்க.''

பதிலேயில்லை. சட்டையை மாட்டிக் கொள்கிறுர். கண்ணுடியை ஒருதரம் பார்த்துக் கொள்கிறுர். வெள்ளை வேட்டிக்காரப் புண்ணியவாளன் அவசர அவசரமாக வாசல் படியைக் கடந்து மறைகிறுர். அவரது அவசரமான வெளிநடப்பு அம்மாவின் சோகத்தை மேலும் அதிகரித்தது. ஈனஸ்வரத்தில் பேசத் தொடங்கிஞள்.

''தம்பி அவனேடை கதைச்சுச் சரிவராது. கதைச்சுச் சரிக்கட்டக்கூடிய மாதிரியாவா அவன் இருக்கிறுன்? வீட்டில என்ன, ஏது எண்டு ஒண்டும் கவனிக்கிறேல்லை. இந்தக் குஞ்சு குறுமான்களுக்கு ஆன சாப்பாடில்லை. பள்ளிக்கூடத்துக்குப் போட ஆன உடுப்பில்லை. அவன் மட்டும் நேரத்திற்கு நேரம் வெள்ளை வேட்டி கட்டிக் கொண்டு திரியிறுன். — இந்த வெக்கக்கேட்டையெல்லாம் வெளியில சொல்லேலுமே?உனக்கு எழுதலாமெண்டால் இவள் பிள்ளைதான் நீ துக்கப்படுவாய், வேணும் எண்டு சொல்லிப்போட்டாள்.''

உப்புப் போட்டு வைத்த பழைய மண் பாண்டம்போல இருந்த அம்மாவின் கோது உடம்பு பதறி ஓய்ந்தது.

''இஞ்சர் அம்மா, இவ்வளவு நாளும் என்னைச் சின்னப்பிள்ளையெண்டு தானே


வாசித்துவிட்டீர்களா?

**செ. யோகநாதன் எழுதியவை**

**1. யோகநாதன் கதைகள்**

(ஏழு சிறந்த சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு)

**2. இருபது வருஷங்களும் மூன்று ஆசைகளும்.**

(குறுநாவற் தொகுதி)

விபரங்களுக்கு:

**உதயம் புத்தகநிலையம்**

15 டி அல்விஸ் பிளேஸ்,

தெகிவளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைச்சனி. இனிப்பாரணை இந்தச் சின்னப் பிள்ளை செய்யிற வேலைய.''

இந்த வார்த்தைகளால் அம்மா சிறிது சமாதானமாகி விடுவாள் என்று எதிர்பார்த்த நான் அக்காள் படுத்திருந்த அறைக்குச் சென்றேன். என்னைக் கண்டதும் வெட்கப்பட்டவள் போல கண்களை மூடிக்கொண்டு சிரமத்துடன் எழுந்தாள். அவளின் கோலத்தைத் தான் என்னென்பது ... மூக்கிலே திட்டுத் திட்டாக காயம் ஏற்பட்டு ஆறிப்போயிருந்தது. இடது கை மணிக்கட்டிலே சிறிய ''பிளாஸ்திரி'' ஒன்று போட்டிருந்தாள். கண்களிலிருந்த வழிந்து கொண்டிருந்த கண்ணீர். அவள் உள்ளத்தில் ஏற்பட்ட ஊமைக் காயத்திற்கு பெரிய ''பிளாஸ்திரி'' போட்டிருக்கின்ருள் என்பதை தெட்டத் தெளிவாகக் காட்டிக் கொண்டிருந்தது.

உதய நேரப் பனி படர்ந்த ரோஜா மலர், இந்தப் பாதகன் கை பட்டு கசங்கிப் போய்விட்டதே, இதற்கு யார் பொறுப்பாளி? அம்மாவா ..? சே! ... சே! ... அது என்ன செய்யும் பாவம். ஒருவேளை நானே? தங்கப் பதுமையைப் போல் பாதுகாத்துத் தக்க இடத்தில் அக்காவைக் கொடுத்திருக்க வேண்டியது எனது பொறுப்பல்லவா? அப்பாவின் அகால மரணத்திற்குப் பின்னர் வீட்டுப் பொறுப்பெல்லாம் எனதல்லவா? நான்தான் என் கடமையிலிருந்து தவறிவிட்டேனே? சரி... நான் முன்னே செய்யத் தவறிய கடமைகளுக்குப் பிராயச்சித்தம் செய்து விட வேண்டியதுதான். என் சொந்த வாழ்க்கையைத் துச்சமாக மதித்துவிட வேண்டியதுதான். ஒரு விநாடிக்குள் என் மனதில் எத்தனை யெத்தனையோ சிந்தனைகள்,

கண்ணிலே பரிவும், தோற்றத்திலே நம்பிக்கையும் காட்டிக்கொண்டு சாவதானமாக அக்காவின் பக்கத்திலே அமர்ந்து கொண்டேன்.

''அக்கா, எனக்கு உண்மையைச் சொல்லு. என்ன செய்யலாம். எண்டு யோசிக்கிருய்'' நான் கேட்டேன்.

''தம்பி, என்ர வாழ்நாள் முழுவதும் அவரிட்ட அடி வாங்கிக்கொண்டு வாழத் தயார். ஆனல், தாய் என்கிற அடி மரத்தில நாளுக்கு நாள் அடி விழ ஒன்றுமறியாத குழந்தைக் கிளைகள் சோர்ந்து, காய்ந்து, பலவீனமாகி நாளா வட்டத்தில் பட்டுப் போயிடும் போல இருக்கே. ஏழும் பெட்டைக் குஞ்சுகள் தம்பிஏழும் பெட்டைக் குஞ்சுகள்''.

அவளுடைய உள்ளத்திலே ஏற்பட்ட ஊமைக் காயத்திலிருந்து இரத்தமல்ல, சீழ் வடிந்து கொண்டிருந்தது.

அந்த ஒரு கணத்தில் — கதைப்பதால் துக்கம் கூடுமேயொழியக் குறையாது என்பதை யறிந்து கொண்டேன். ''நாட்டை'' மாற்றுகிறேன்.

[அடுத்த இதழில் முடிவடையும்]


## "மலர் பற்றி ஒரு வார்த்தை!"

மலர் அழகுடையது — அதனுல் மனதுக்கு மகிழ்வு தருவது!
மலர் மணம் கமழ்வது — அதனுல் உள்ளத்துக் உவகை ஊட்டுவது!
மலர் தேன் தருவது — அதனுல் மக்களுக்குத் தேவையானது!

**ஈழத்து இலக்கிய உலகில் ''மலர்'' சஞ்சிகை ஒரு மலர்!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For all your requirements of

OILMAN GOODS

TOYS & STATIONERIES Etc., Etc.

*Visit*

# THILLAINADARAJAH STORES

THE MODERN SHOP FOR ALL KINDS OF

LATEST FANCY GOODS

**19, CENTRAL ROAD, BATTICALOA.**

உங்களுக்குத் தேவையான

★ சகலவிதமான சாய்ப்புச் சாமான்கள்,

★ விளையாட்டுப் பொருட்கள்,

★ காகிதாதிகள்

மற்றும் நங்கையர் விரும்பும்

★ நவநாகரீக நவீன பொருட்கள்
ஆகியவற்றுக்கும்

★ தையற் பொருட்களுக்கும்

சிறந்த ஸ்தாபனம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

# கணேசன் ஸ்டோர்ஸ்

**13, மத்திய வீதி, மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanabhan 15 FEB 1970

## WHAT IS THE 'LIFE SPAN' OF YOUR ADVERTISEMENT,

The life of a daily paper is 24 hours.
The life of a weekly is 7 days.
The life of a fortnightly is 14 days.
The life of a monthly is 30 days.

## 'MALAR' IS A MONTHLY MAGAZINE

★ It goes to the homes of educated people with Artistic and Literary taste. — People who appreciate the value of Advertisements.
It reaches the hands of Teachers, Trainees, Students Officers and the like.
It finds a place in Schools, Colleges, Libraries and similar Institutions.

★ It will be handled by all members in a household — Father, Mother & Children.— Several times a day and this will continue for 30 days in a month.

WOULD YOU PREFER YOUR ADVERTISEMENT BEING SEEN BY MANY PEOPLE ONLY ONCE OR BY SOME PEOPLE SEVERAL TIMES?

THAT'S IT!

**REMEMBER.**
**REPETITION IMPRESS MUCH.**

# 'MALAR'

R. P 15 FEB 1970

(Tamil Literary monthly)

## ADVERTISEMENT TARIFF

**(Rates effective from 1.1.70)**

| | | |
|---|---|---|
| Inside full page | — | Rs. 125-00 per insertion. |
| Inside cover page | — | Rs. 150-00 per insertion. |
| Back cover page | — | Rs. 200-00 per insertion. |

Blocks, if any, should be supplied by the advertisor.

A rebate of 5% will be allowed for contract of 6 months (6 insertions)
A rebate of 10% will be allowed for contract of one year (12 insertions)

## MECHANICAL DATA

| | |
|---|---|
| Size of Magazine | $9\frac{1}{2}'' \times 7\frac{1}{2}''$ |
| Size of printed page | $8\frac{1}{2}'' \times 6\frac{1}{2}''$ |
| Size of coloumn | $8\frac{1}{2}'' \times 3''$ |

# "MALAR"

21, Central Road,
**BATTICALOA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printer: Rev. Bro. Joseph B. M[illegible] S. S. J. at Catholic Press, 18, Central Road, Batticaloa.
Publisher: R. Nalliah, 21, Central Road, Batticaloa.
Hon. Editor: R. Nagalingam, 21, Central Road, Batticaloa.